# 1 நாம் விசேஷமானவர்கள்

*We are Special*



**தேவன் நம்மை விசேஷமாய் படைத்திருக்கிறார்.**
**அவரைப் போல விசேஷமானவராக இருக்க.**

**ஆதி 1:26, 27, 28**

*தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்.*

Hi Friends, இந்த உலகத்தை பார்க்கும் போது எவ்வளவு ஆச்சரியமாக இருக்கிறது. அழகான கடல்கள், மலைகள், பறவைகள், மிருகங்கள், அழகான பூக்கள், பழங்கள், செடிகள் எத்தனை அருமையாக இருக்கிறது. ஒரு பூவை பார்த்தால் எவ்வளவு அழகாக இருக்கிறது. ஒரு பழத்தை சாப்பிட்டால் எவ்வளவு ருசியாக இருக்கிறது. இவை அனைத்தையுமே நம்முடைய தேவன் ஒரு வார்த்தையில் படைத்தார். ஆனால் மனிதனை மட்டும் தம்முடைய கரத்தினால் உருவாக்கினார்.

## தேவசாயல்-ரூபம் (Image & Likeness)

தேவன் மனிதனை படைக்கும் போது அவருடைய சாயலின்படியேயும் ரூபத்தின்படியேயும் தம்மை போலவே உருவாக்கினார். ஆகவே தான் மனிதனுக்கு எல்லா ஆற்றலும் இருக்கிறது. இன்றைய எல்லா அறிவியல் முன்னேற்றத்திற்கும் நவீன நாகரீக முன்னேற்றத்திற்கும் இதுதான் காரணம். தேவனுடைய வித்து (DNA) நமக்குள் இருக்கிறது. அது ஒவ்வொரு மனிதனின் உறுப்புகளிலும் ஆச்சரியமாக செயல்படுகிறது. ஒவ்வொரு மனித மூளையிலும் 4Tb (4096GB) ஞாபகசக்தி உண்டு என்று அறிஞர்கள் கணிக்கிறார்கள். கிட்டத்தட்ட 300 வகையான திறமைகள் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறது என்று ரிக்வாரன் என்ற போதகர் கூறியுள்ளார்.

சங்கீதம் 139:14 நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன் (I will praise You for I am fearfully and wonderfully made) என்று தாவீது கூறியிருக்கிறார்.

சங்கீதம் 8:5

"நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர். மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடி சூட்டினீர் என்று வேதம் கூறுகிறது. ஆனால் இதே வசனம் (little lower than God) என்று Amplified வேதாகமத்தில் கூறப்பட்டுள்ளது.

## ஆளும் அதிகாரம் (Dominion)

தேவன் மனிதனுக்கு இந்த பூமியில் ஆளும் அதிகாரத்தைக் கொடுத்தார். ஆகவேதான் உலகில் உள்ள பறவைகள், மிருகங்கள் எல்லாம் மனிதனின் ஆளுகைக்கு உட்பட்டு இருக்கிறது.

மேலும் மனிதனை அடிமையாக படைக்கவில்லை, தெரிந்து கொள்ளும் உரிமையும் (Choosing power) கொடுத்தார். இந்த உலகத்திலுள்ள எல்லாம் மனிதனுக்காகவே படைக்கப்பட்டது. ஆகவே நாம் சாதாரணமானவர்கள் அல்ல. நாம் விசேஷமானவர்கள். ஒரு வேளை நாம் கறுப்பாகவோ, குட்டையாகவோ, ஒல்லியாகவோ, நெட்டையாகவோ, குண்டாகவோ இருக்கலாம். மற்றவர்கள் விரும்பும் வகையில் கூட நாம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் நாம் தேவனுடைய படைப்பாகவும் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்றவும் படைக்கப்பட்டோம். விபத்தாக நாம் இங்கு இல்லை. நமக்காக தேவன் பெரிய திட்டத்தையே வைத்திருக்கிறார்.

## சாதனையாளர்கள்

பழைய செருப்பு தைக்கும் தொழிலாளியாக இருந்தவரின் மகனான ஆபிரகாம் லிங்கன் பின் நாளில் அமெரிக்க ஜனாதிபதியாக வந்தார். இங்கிலாந்தில் பழைய செருப்பு தைக்கும் தொழிலாளியாக இருந்தவர் வில்லியம் கேரி. இந்தியாவில் பல சாதனைகள் புரிந்தார். 20க்கும் மேற்பட்ட மொழிகளில் வேதாகமத்தை மொழி பெயர்த்தார். வேதாகமத்தை அச்சிட உதவினார். சதி எனும் உடன்கட்டை ஏறும் கொடிய பழக்கத்தை தடுத்தார். கல்கத்தாவில் உள்ள செராம்பூர் வேதாகம கல்லூரியை உருவாக்கினார். ஆகவே உலகில் எத்தனையோ சாதனையாளர்கள் சாதாரண பின்னணியில் இருந்து வந்தவர்கள் தான்.

ஆகவே நாம் யாரும் சாதாரணமானவர்கள் அல்ல, **நம்முடைய பின்னணியை வைத்து நம்முடைய எதிர்காலத்தை நாம் நிர்ணயிக்கக் கூடாது.** தேவன் நமக்கு பெரிய காரியங்களைச் செய்வார். நம்முடைய உள்ளம் எதிர்மறையான எண்ணங்களை (Negative Thoughts) விட்டுவிட வேண்டும். தேவனுடைய தரத்திற்கு (God's Standard) நம்முடைய வாழ்க்கைத் தரத்தை மாற்றிக் கொள்ள வேண்டும்.

**தேவன் நம் ஒவ்வொருவரையையும் தனித்தன்மையுடைவர்களாக படைத்திருக்கிறார். ஆகவே மற்றவர்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாது. (உலகில் ஒருவருக்கு கூட ஒரே மாதிரியான கை ரேகை கிடையாது)**
**தேவன் நாம் ஒவ்வொருவருக்கும் தனித்திறமைகளையும், தாலந்துகளையும் நமக்கு கொடுத்திருக்கிறார். அதை கண்டுபிடித்து சரியாக பயன்படுத்த வேண்டும்.**

என்னை குறித்து நான் எப்படிப்பட்ட மதிப்பீடு வைத்திருக்கிறேன் ?

எனக்குள் இருக்கும் திறமைகள் என்னென்ன? எப்படி பயன்படுத்து





## Action Steps



**ஜெபம்**

அன்புள்ள ஆண்டவரே என்னை நீர் விசேஷமாய் படைத்தபடியால் உம்மைத் துதிக்கிறேன். உம்முடைய திட்டத்தை நான் இந்த பூமியில் நிறைவேற்ற உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 2 தேவனின் உதவி

(ஆதாம் - ஏவாள்)

*Adam & Eve*



**தேவன் அன்பானவர். பாவம் செய்த மனித குலத்திற்கு உதவி செய்து நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.**

**ஆதி 3:1-24**

**யோவான் 10:10**

*திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (இயேசு)*

தேவனால் படைக்கப்பட்ட ஆதாமும், ஏவாளும் தேவனோடு நல்ல உறவு வைத்து கொண்டு சந்தோஷமாக இருப்பதோடு, எல்லாவற்றையும் அனுபவிக்கவும், ஆளுகை செய்யவும் அதிகாரம் பெற்றிருந்தார்கள். தெரிந்து கொள்ளும் உரிமையும் (Choosing power) கொடுக்கப்பட்டிருந்தது.

## சாத்தானின் வஞ்சனை

**ஏவாளிடம் சர்ப்பமானது (சாத்தான்) தேவனை குறித்து எழுப்பிய சந்தேகங்கள் ஆதி 3:1-6**

1. சகல விருட்சத்தின் கனியை புசிக்கக்கூடாது. v-2
2. நீங்கள் சாவதில்லை. v-4
3. தேவர்கள் போல் ஆவீர்கள். v-5

முதலாவது சாத்தான் தேவனைக் குறித்து சந்தேகத்தை உருவாக்கி பாவம் செய்ய தூண்டினான்.

தேவன் எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரம் கொடுத்தார். (ஒன்றைத் தவிர)

தேவன் மனிதனை அவருடைய சாயலாகவும் ரூபத்தின்படியும் மேன்மையாக படைத்திருந்தார்

ஆனால், ஏவாள் சாத்தானின் வஞ்சனையினாலும், தவறான தூண்டுதலினாலும் தேவன் விலக்கி வைத்த கனியை புசித்து, பிசாசின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்து, தேவனுக்கு கீழ்படியாமல் போனார்கள். பாவம் செய்தார்கள்.

## தற்காலிக தீர்வு (Temporary Solution)

பாவம் செய்ததால் அவர்கள் கண்கள் திறக்கப்பட்டது. தாங்கள் நிர்வாணிகள் என்பதை உணர்ந்தார்கள். ஆகவே அத்தி இலைகளை உண்டுபண்ணி, தங்களை மறைத்துக் கொண்டார்கள். ஆனாலும் அன்பான தேவன் பாவம் செய்த, கீழ்படியாத ஆதாமை தேடி வந்து அவனை அழைத்தார்.

## தவறை ஒத்துக் கொள்ளாமை

ஆதாம் தான் செய்த தவறை உணரவில்லை. ஏவாள் மேல் பழியை போட்டான். ஏவாள் சர்ப்பத்தின் மேல் பழியை போட்டாள். ஆகவே சாபத்தை பெற்றார்கள்.

ஆதாமும், ஏவாளும் தற்காலிக தீர்வாக அத்தி இலைகளை உடையாக உடுத்தி இருந்தனர். ஆனாலும் அன்பான தேவன் அவர்களுக்காக ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து அதன் தோலை உடையாக மனிதனுக்கு கொடுத்தார். நிரந்தர தீர்வை ஏற்படுத்தினார்.

இன்றைக்கும் அநேக மக்கள் தற்காலிகமாக தங்களுடைய பாவங்களை போக்க, தானதர்மங்கள், நற்கிரியைகள், பக்திமார்க்கங்கள் என்று அநேக காரியங்களை செய்கிறார்கள். ஆனாலும் பாவம் போக்கப்படவில்லை, நிரந்தர தீர்வும் ஏற்படவில்லை.

## பாவத்திற்கு தீர்வு இயேசு கிறிஸ்து

மனுக்குலத்திற்கு பாவத்திலிருந்து மீட்பை ஏற்படுத்தவே இயேசு கிறிஸ்து இந்த பூமிக்கு வந்தார்.

*தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.* யோவான் 3:16

மனுக்குலம் பாவத்தினால் கெட்டுப்போகக் கூடாது என்பது தேவனுடைய விருப்பம். ஆகவே தான் இயேசு இந்த பூமிக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் இந்த பூமியில் அற்புதமாய் வந்து பிறந்தார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்தில் மனிதர்கள் செய்யும் பாவத்திற்காக மிருகங்களின் இரத்தம் சிந்தப்பட்டது. ஆனால் இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னுடைய சொந்த இரத்தத்தை சிந்தி, உலக மக்களின் பாவத்தண்டனைகள் அனைத்தையும் அவர் ஏற்றுக் கொண்டார். ஆகவே, மனுக்குலத்தின் பாவத்திற்கான தண்டனை முழுவதும் இயேசு கிறிஸ்து மூலம் சிலுவையில் செலுத்தப்பட்டு விட்டது. இனி மனிதனுக்கு பாவத்திற்கான தண்டனை கிடையாது. இதன் மூலம் தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள புதிய உறவை இயேசு ஏற்படுத்தி விட்டார்.

## இரட்சிப்பு

இயேசுவை நாம் விசுவாசித்து நாம் அவரை ஏற்றுக் கொள்ளும் போது நமக்கு இரட்சிப்பு ஏற்படுகிறது. ஒரு வேளை நாம் கிறிஸ்தவ குடும்பத்தில் பிறந்திருக்கலாம். கிறிஸ்தவ பெயர் நமக்கு இருக்கலாம். ஆனாலும் கூட தனிப்பட்ட முறையில் இயேசுவை நாம் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ளும் போது மட்டுமே நமக்கு இரட்சிப்பு கிடைக்கிறது. புதிய வாழ்க்கையும் நமக்கு கிடைக்கிறது.

ரோம் 3:24

*இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்*

ரோம் 4:25

*அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டும், நாம் நீதிமான்களாக்கப்படுவதற்காக எழுப்பப்பட்டும் இருக்கிறார்.*

ரோமர் 10:9-10

*என்னவென்றால், கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்.*

*நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும், இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கைபண்ணப்படும்.*

## ஆண்டவரை ஏற்றுக் கொள்ள மாதிரி ஜெபம்

ஆண்டவர் நம் இருதயத்தை மாத்திரம் பார்க்கிறார்.

அன்புள்ள ஆண்டவரே, உம்மை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்கிறேன். என் பாவங்களை மன்னியும். நான் எப்படிப்பட்டவனாக இருக்க நீர் விரும்புகிறீரோ அப்படியாக என்னை மாற்றும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

யோவான் 1:12

*அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.*

நாம் இயேசுவை தனிப்பட்ட முறையில் ஏற்றுக் கொள்ளும் போது ஆண்டவருடைய பிள்ளையாக மாறுகிறோம்.

ஒரு முறை ஒரு வாலிபன் தன்னுடைய புதிய காரில் விரைவாக, சந்தோஷமாக பயணம் செய்து கொண்டிருந்தான். போய்க் கொண்டிருக்கும் போது திடீரென பழுதாகி அந்தக் கார் நின்று விட்டது. அநேக மக்களிடம் உதவி கேட்டான். அநேகர் வந்து காரை சரி செய்ய முயற்சி செய்தனர். ஆனாலும் கார் சரியாகவில்லை. அப்பொழுது அந்த வழியாக சென்ற ஒரு முதியவர் தன்னுடைய காரில் இருந்து இறங்கி அந்த வாலிபனிடம் வந்தார். அந்த வாலிபன் அந்த முதியவரை அலட்சியமாக பார்த்தான். எத்தனையோ

நபர்கள், திறமைசாலிகள் வந்தும் இந்தக் காரை சரி செய்ய முடியவில்லை. இவர் என்ன செய்யப் போகிறார் என்று எண்ணினான்.

முதியவர் காரின் முன் பகுதியை திறந்து, அதைப் பார்த்து சில பாகங்களை சரியாக பொருத்தினார். இப்பொழுது அந்த கார் சரியாக இயங்கியது. அந்த வாலிபன் அவரை ஆச்சரியமாக பார்த்து, ஐயா நீங்கள் யார் என்று கேட்டான். அப்பொழுது அந்த முதியவர் சொன்னார் ‘நான் தான் Henry Ford இந்த காரை உருவாக்கியதே நான் தான், ஆகவே இதில் உள்ள பிரச்சனைகளை தீர்க்க என்னால் முடிகிறது’ என்றார்.

அதே போலதான் நமக்குள் எத்தனையோ பிரச்சனைகள், கஷ்டங்கள், போராட்டங்கள், பாவங்கள் இருக்கலாம். இதையெல்லாம் நம்மால் சரி செய்ய முடியாது. ஆனால் நம்மை உருவாக்கிய, சிருஷ்டித்த தேவனால் மட்டுமே நம்மை சரி செய்ய முடியும்.அவரிடம் நம் வாழ்க்கையை ஒப்பு கொடுப்போம்.




**மனிதனுடைய எல்லா பாவங்களுக்கான தண்டனையையும் தீர்க்க இயேசு கிறிஸ்து சிலுவையில் தன்னையே பலியாக செலுத்தி விட்டார். சிலுவையில் மனிதனுக்காக சம்பாதித்த மீட்பை நாம் பெற்றுக் கொள்ள நாம் விசுவாசித்து அவரை ஏற்றுக் கொண்டால் போதும்.**



இயேசு கிறிஸ்துவை என்னுடைய சொந்த இரட்சகராக ஏற்று கொண்டு இருக்கிறேனா?

இயேசு கிறிஸ்து என் வாழ்வில் இருக்கிறார் என்ற நிச்சயம் உண்டா ? எப்படி?

*(நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை என்று அவர் சொல்லியிருக்கிறாரே.எபிரெ 13:5)*



## Action Steps



**ஜெபம்**

அன்புள்ள ஆண்டவரே எங்களுக்காக பெரிய மீட்பை உண்டு பண்ணினீரே, அதற்காக நன்றி செலுத்துகிறேன். உம்முடைய பரிசுத்த இரத்தத்தினால் என்னை நீதிமானாக்கினீரே, உமக்கு நன்றி செலுத்துகிறேன். நான் இந்த பூமியில் வெற்றியாக வாழ எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 3 விசுவாசம்

(ஆபிரகாம்)

Faith



**நாம் தேவனிடத்தில் உறுதியான விசுவாசம் வைத்து அதற்கு ஏற்றபடி செயல்படும் போது தேவன் நமக்கு பெரிய காரியங்களை செய்கிறார்.**

**எபிரெ 11:1, 6**

1 யோவான்: 5:4 **"நம்முடைய விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்".**

ஒரு நாள் ஒரு சிறுவன் தன் தகப்பனோடு கூட நடந்து போய் கொண்டிருந்தான். போகும் வழியில் ஒரு கடையில் Ice-Cream இருப்பதை பார்த்து விட்டான். உடனே "அவன் அப்பா எனக்கு Ice-Cream வாங்கித் தாருங்கள்" என்றான். "அதற்கு தகப்பன் "நாளைக்கு நான் உனக்கு வாங்கி தருகிறேன்" என்றார். உடனே சிறுவன் தகப்பனுடைய வார்த்தையை நம்பி சந்தோஷமாக வீடு சென்றான். மறுநாள் தன் தகப்பன் சொன்னபடி Ice-Cream வாங்கி கொடுத்தார். சிறுவனும் மிகவும் சந்தோஷமாக சாப்பிட்டான்.

## ஆபிரகாம்

இதை போலதான் ஆண்டவர் தாம் செய்ய போகும் காரியங்களைக் குறித்து நமக்கு வாக்குத்தத்தங்களை கொடுக்கிறார். நாம் அதை உறுதியாக விசுவாசிக்கும் போது நமக்கு அது கிடைக்கிறது.

ஆண்டவர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் கொடுத்தார். ஆதி 12:2

*"நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன் நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்."*

கர்த்தர் சொன்னபடியே ஆபிரகாமை ஆசீர்வதித்து பெரிய ஜாதியாக்கினார். பிள்ளையில்லாமல் இருந்த ஆபிரகாம் விசுவாசித்து காத்திருந்ததினால், அவருடைய 100வது வயதில் பிள்ளையை (ஈசாக்கை) கொடுத்து ஆசீர்வதித்தார். ஆண்டவர் சொன்ன அனைத்து வாக்குத்தத்தங்களையும் ஆபிரகாம் விசுவாசித்தார். அதனால் எல்லாவற்றையும் பெற்றுக் கொண்டார்.

## விசுவாசமும் கிரியையும்

விசுவாசத்திற்கேற்ற கிரியைகளை நாம் செய்யும் போது அது நமக்கு பலன் கொடுக்கிறது. கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும்.

* நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் சுகம் (லூக்கா 7:1-10)

நூற்றுக்கு அதிபதி இயேசுவின் வார்த்தையை விசுவாசித்தான். அதனால் அவன் வேலைக்காரன் சுகமானான்.

* 12 வருட பெரும்பாடுள்ள பெண் சுகம் (மாற் 3: 25-34)

இயேசுவை ச்சுற்றிலும் திரளான ஜனங்கள் இருந்தார்கள். ஆனாலும் இயேசுவின் வஸ்திரத்தை தொட்டாள், சுகம் கிடைக்கும் என்று விசுவாசத்தோடு, Risk எடுத்து தொட்டாள் சுகமும் பெற்றாள்.

## பர்த்திமேயு குருடன் பார்வையடைதல் (மாற்கு 10:46-52)

இயேசு நடந்து போகையில் குருடன் தன்னுடைய சுகத்திற்காக சத்தமாய் கூப்பிட்டான். அநேகர் அவனை அதட்டினார்கள். ஆனாலும் அவன் தடைகளை பார்க்கவில்லை. இயேசு அவனுடைய விசுவாசத்தை பார்த்து கண்களில் பார்வை கிடைக்கச் செய்தார்.

வேதம் முழுவதும் அநேக அற்புதங்கள், விசுவாசத்தின் அடிப்படையில் நடந்தவைகளாகும்.

## ஜெபமும் + விசுவாசமும் = ஜெயம்

ஜெபமும் விசுவாசமும் இணையும் போது நமக்கு ஜெயம் எளிதாகிறது.

(மத் 21:22) ______________________________

விசுவாசிக்கிறவர்களுக்கு எல்லாம் கூடும் என்று வேதம் கூறுகிறது.

## விசுவாசம் + சொல்லுதல்= பதில்

மத் 21:19-21இயேசு அத்தி மரத்தை சபித்தார். அதன்படி அத்திமரம் பட்டுப் போயிற்று. மேலும் இயேசு "நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால் இந்த அத்திமரத்திற்கு செய்ததை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையை பார்த்து "நீ பெயர்ந்து தள்ளுண்டு போ என்று சொன்னால் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" என்றார்.

விசுவாசமாய் நாம் பேசும்போது தேவனின் வல்லமையை வெளிப்படும்.

## விசுவாசத்தை வளர்த்தல்



1. தேவன் எப்படிப்பட்டவர் என்பதை நாம் முழுமையாக அறிந்து கொள்ள வேண்டும்.
2. வேத வசனங்களை முறையாக வாசித்து தியானிக்க வேண்டும்.

3. சிறிய காரியமானாலும், பெரிய காரியமானாலும் தேவனிடத்தில் விசுவாசம் வைக்க வேண்டும்.

4. விசுவாசத்தை வாழ்க்கையில் தொடர்ந்து பயிற்சி செய்ய வேண்டும்.

5. விசுவாசமான வார்த்தைகளை பேச வேண்டும். பலவீனமான நேரங்களில் “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினால் எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு. என்று சொல்ல வேண்டும்.

6. விசுவாச செய்திகளை கேட்க வேண்டும்.

7. கடந்த காலங்களில் தேவன் செய்த நன்மைகளை நினைத்து நன்றி செலுத்த வேண்டும்.

## விசுவாசத்தை பாதிக்கும் வைரஸ்

(Virus of faith)



### 1. அவிசுவாசம் (Unbelief) எபிரெயர் 11:6

விசுவாசத்திற்கு பெரிய எதிரியான அவிசுவாசம் தேவனை செயல்பட விடாமல் தடைசெய்கிறது. இயேசு தம்முடைய சொந்த ஊரில் அநேக அற்புதங்களை, செய்யவில்லை காரணம் அவிசுவாசம்தான்.

### 2. பயம் (Fear)

நமக்குள் ஏற்படும் பயம் தேவனின் வல்லமை வெளிப்பட தடை செய்கிறது. யோபு 3:25

---

### 3. யூகம் (Mental assumption)

யோவான் 11:20-24

இயேசு மரித்த லாசருவை உயிரோடு எழுப்புவதாக கூறுகிறார். ஆனால் மார்த்தாள் உயிர்த்தெழுதல்நடக்கும் நாளில் தன் சகோதரன் உயிரோடு எழும்புவான் என்று தவறாக புரிந்து கொண்டாள்.

### 4. Lack of Risk மத் 14:27

விசுவாசம் செயல்பட Risk எடுக்க வேண்டும். நம்முடைய வாழ்வில் Risk எடுத்து விசுவாசத்தில் அடியெடுத்து வைக்க வேண்டும். விசுவாசித்தார் பேதுரு, கடல் மீது நடந்தார். தாவீது கோலியாத்தை முறியடித்தான்.

### 5. அளவுக்கு அதிகமான நம்பிக்கை (Over confidence)

ரோமர் 12:3

உங்களில் எவனாகிலும் தன்னைக் குறித்து எண்ண வேண்டியதற்கு மிஞ்சி எண்ணாமல் அவனவனுக்கு தேவன் பகிர்ந்த விசுவாச அளவின்படியே, தெளிந்த எண்ணமுள்ளவனாய் எண்ண வேண்டும். மூளை அறிவினால் நாம் சாதிக்க முடியும் என்று அதின் மேல் அதிக நம்பிக்கை வைத்தால்.அது விசுவாசத்தை அழித்து விடும். ஏமாற்றம் தான் ஏற்படும். ஆகவே சூழ்நிலைகளை விட தேவனை விசுவாசிக்க வேண்டும்.

### 6. சூழ்நிலையை அதிகமாய் நம்புவது

அநேக நேரங்களில் நம்முடைய சூழ்நிலையை அதிகமாய் நாம் நம்பும் போது, தேவனுடைய செயல்கள், தேவனுடைய வார்த்தை மட்டுப்படுத்தப்படுகிறது. ஆகவே சூழ்நிலையை விட தேவனின் வார்த்தையை அதிகமாக விசுவாசிக்க வேண்டும்.

### 7. தேவனை மட்டுப்படுத்துதல் (Limiting God)

தேவனை நாம் மட்டுப்படுத்தும் போது தேவனுடைய செயல்கள் தடை செய்யப்படுகிறது.




**எந்த சூழ்நிலையிலும் தேவன் நமக்கு வெற்றி தருவார் என்ற உறுதியான விசுவாசம் வேண்டும்.**
**எல்லா நேரங்களிலும் அவருடைய வாக்குத்தத்த வசனங்களை நினைவுகூர்ந்து விசுவாசிக்க வேண்டும். விசுவாசம் மாபெரும் காரியங்களை நம்மில் நடப்பிக்கிறது.**

என்னுடைய விசுவாசம் எப்படி இருக்கிறது ?

நான் எல்லா சூழ்நிலையிலும் தேவனை விசுவாசிக்கிறேனா ?





## Action Steps



**ஜெபம்**

அன்புள்ள ஆண்டவரே, விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரும் நீர்தான். நான் என் வாழ்வில் உம்மை 100% நம்பவும் விசுவாசிக்கவும் எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 4 நேரத்தை நிர்வகித்தல்




## Time Management



**காலத்தை சரியான முறையில் ஞானமாய் பயன்படுத்த வேண்டும்.**

எபேசி 5:16

சங் 90:12

கொலோ 4:5

## எறும்பும் - வெட்டுக்கிளியும்

ஒரு காட்டில் எறும்பும் வெட்டுக்கிளியும் இருந்தது. எறும்பு எப்பொழுதும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருக்கும். தனக்கு வேண்டிய உணவு பொருட்களை சேர்த்து வைத்துக் கொண்டிருக்கும். ஆனால் வெட்டுக்கிளி எறும்பை பார்த்து ஏளனமாய் கிண்டல், கேலி செய்து கொண்டு சோம்பேறியாய் படுத்துக் கொண்டிருக்கும். ஆனால் எறும்பு தன்னுடைய வேலையில் கவனம் செலுத்தியது. ஒரு சில நாட்கள் கழித்து அந்த காட்டில் பெரிய மழை பெய்யத் தொடங்கியது. எந்த மிருகங்களும் வெளியே வரமுடியவில்லை. வெட்டுகிளிக்கு பயங்கர பசியாக இருந்தது. இரை ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் எறும்பு தான் சேர்த்து வைத்த உணவை சாப்பிட்டு சந்தோஷமாக இருந்தது.

இந்த உலகத்தில் எதை இழந்தாலும் திரும்ப சம்பாதிக்கலாம். அதாவது பணம், பொருள், வீடு, பதவி ஆனால் நேரத்தை நாம் இழந்தால் மீண்டும் திரும்ப பெற்றுக் கொள்ள முடியாது. ஆகவேதான் ஆண்டவர் ஒவ்வொன்றையும் அதினதின் காலத்திலே படைத்தார்.

பிரசங்கி 3:1 *ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு காலமுண்டு. வானத்தின் கீழிருக்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் ஒவ்வொரு சமயமுண்டு.*

பிரசங்கி 3:11 *அவர் சகலத்தையும் அதினதின் காலத்தில் நேர்த்தியாக செய்திருக்கிறார். தேவனே எல்லாவற்றையும் அதினதின் காலத்தில் செய்து முடித்திருக்கிறார்.*

ஆகவே நாமும் நமக்கு கொடுக்கப்பட்ட நேரத்தையும், காலத்தையும் சரியாய் பயன்படுத்த வேண்டும்.

# காலத்தை சரியாய் நிர்வகித்தல்



## 1. திட்டமிட வேண்டும் (Plan)

நாம் என்ன செய்யப் போகிறோமோ அதனை சரியான விதத்தில் திட்டமிட வேண்டும். நேரத்தை சரியாய் குறித்துக் கொண்டு திட்டமிட வேண்டும்.

## 2. அட்டவணைப்படுத்த வேண்டும் (Schedule it )

நாம் என்ன செய்ய திட்டமிட்டுள்ளோம் என்பதை வைத்து அட்டவணைப்படுத்த வேண்டும். ஒவ்வொரு காரியத்திற்கு எவ்வளவு நேரம் என்பதை ஒதுக்க வேண்டும்.

## 3. முக்கியப்படுத்துதல் (Priorities)

நாம் செய்ய போகும் காரியத்தில் முக்கியத்தின் அடிப்படையில் திட்டமிட வேண்டும். அவசியம், அவசரமான காரியங்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

## 4. சிறப்பாக செயல்பட வேண்டும் (Best Performance)

*நீதி 22:29 தன் வேலையில் ஜாக்கிரதையாயிருக்கிறவனை நீ கண்டால், அவன் நீசருக்கு முன்பாக நில்லாமல், ராஜாக்களுக்கு முன்பாக நிற்பான்".*

நாம் செய்யும் காரியத்தில் சிறப்பாக செயல்பட வேண்டும். ஒரு சிறு தவறு கூட இல்லாமல், முழுக்கவனத்தையும் செலுத்தி சிறப்பாக செயல்பட வேண்டும்

## 5. எல்லாவற்றையும் குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும்

நாம் திட்டமிட்டபடி நம்முடைய வேலையை குறித்த நேரத்தில் முடிக்க வேண்டும். அப்பொழுது தான் நேரம் வீணடிக்கப்படுவது தவிர்க்கப்படும். மற்ற வேலைக்கும் நேரம் கிடைக்கும்.

# நேரம் எப்படியெல்லாம் வீணாகிறது



1. தேவையற்ற நபர்களோடு மொபைல் பேச்சுக்கள், SMS
2. தேவையற்ற, Whatsapp, Chatting, Facebook, Youtube வீடியோக்கள் மற்றும் Tv நிகழ்ச்சிகள்
3. தவறான நண்பர்களின் உறவு.
4. அவசியமற்ற காரியத்தில் தன்னை ஈடுபடுத்திக்கொள்வது.

*நீதி 26:17 "வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப் போலிருக்கிறான்."*

5. முன் ஆயத்தம் இல்லாதிருந்தால் நேரம் வீணாகும்.

Ex. நீங்கள் முக்கியமான இடத்திற்கு போக வேண்டும் என்று இருந்தால் முன்னதாகவே வண்டியில், பெட்ரோல் நிரப்பி கொள்ள வேண்டும்.

## நேரத்தை சரியாக முதலீடு செய்ய வேண்டும்

1. நாம் தேவனுக்கென்று நேரத்தை செலவு செய்ய வேண்டும்.

   (ஜெபம், வேதவாசிப்பு, ஆவிக்குரிய செய்தி கேட்டல், ஐக்கிய கூட்டத்தில் கலந்து கொள்ளுதல்)

2. சபையிலும், மற்ற ஊழியங்களிலும் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

3. நாம் படிக்கும் போது படிப்பில் முழுகவனம் செலுத்த வேண்டும்.

4. திறமைகள், தாலந்துகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

5. விளையாட்டுகளில் ஈடுபட வேண்டும் (மொபைலில் அல்ல).

6. புதியதாக காரியங்களை கற்றுக்கொள்ள வேண்டும்.

   (Computer, Typewriting, Learning Languages - English..........)




**"உலகில் எல்லா மனிதர்களுக்கும் 24 மணி நேரம் கொடுக்கப்படுகிறது. அதை சரியாக பயன்படுத்துகிறவர்களை பொறுத்து அவர்கள் வாழ்வில் வெற்றி அமைகிறது"**



1. என்னுடைய நேரத்தை நான் எப்படி செலவு செய்கிறேன்?
2. என்னுடைய நேரத்தை வீணடிக்கும் தேவையற்ற காரியங்கள் என்னென்ன?
3. ஆவிக்குரிய காரியங்களுக்கு நான் எப்படி நேரத்தை செலவு செய்கிறேன்?



## Action Steps



**ஜெபம்**

அன்புள்ள ஆண்டவரே காலத்தை பிரயோஜனப்படுத்த எனக்கு உதவி செய்யும், நேரத்தை கெடுக்கிற எல்லா தேவையற்ற காரியங்களையும் என்னை விட்டு அகற்றும். காலத்தை சரியாக பயன்படுத்த உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.



# 5 தேவதிட்டம் நிறைவேறுதல்

(யோசேப்பு)

**தேவன் நமக்கு வைத்திருக்கும் திட்டங்களையும், தரிசனங்களையும் வாக்குத்தத்தங்களையும் நிறைவேற்ற அவரே நமக்கு உதவி செய்வார் ஆற்றலையும் தருவார்.**

ஆபகூக் 2:3

## யோசேப்பு - தரிசனம்

யாக்கோபுக்கு பன்னிரெண்டு ஆண் பிள்ளைகள் உண்டு. அதில் ஒருவன் பெயர் யோசேப்பு. தேவன் அந்த யோசேப்புக்கு சிறுவயதிலே தன்னுடைய திட்டத்தை வெளிப்படுத்தினார். (ஆதி 37:5-10) அதனை தம்முடைய பெற்றோர்களிடத்திலும், சகோதரர்களிடத்திலும் சொன்னான். ஆனால் அவர்களோ அவனை அசட்டை பண்ணினார்கள். ஆனாலும் யோசேப்பு அந்த தரிசனத்தை தனக்குள் வைத்து கொண்டான்.

யோசேப்பின் சகோதரர்கள் அவன் மீது பொறாமை கொண்டு அவனை இஸ்மவேலர் கையில் அடிமைகளாக 20 வெள்ளிக்காசுக்கு விற்றுப் போட்டனர். போத்திபார் என்பவன் யோசேப்பை அடிமையாக வாங்கினார். சில நாட்களில் போத்திபாரின் மனைவியின் வஞ்சனையினால், யோசேப்பு சிறைச்சாலைக்கு கொண்டு போகப்பட்டான். ஆனாலும் யோசேப்போடு கர்த்தர் இருந்தார். அதனால் அவன் திறமைசாலியாக இருந்தான். சிறைச்சாலையில் தனக்கு ஆண்டவர் கொடுத்த தாலந்துகளையும் பயன்படுத்தினான். ஏற்ற நேரம் வந்தது. பார்வோனின் சொப்பனத்திற்கு அர்த்தம் கூறி அதற்கு நல்ல ஆலோசனையும் கூறினார். அதனால் எகிப்தில் உயர்ந்த பதவியில் அமர்த்தப்பட்டான்.

பின்னர் அவனுடைய குடும்பத்தினர் அனைவரையும் பஞ்சத்திற்கு விலக்கி காப்பாற்றினார். தேவன் சொன்னபடி அவனுக்குரிய திட்டத்தை கர்த்தர் நிறைவேற்றினார்.

Friends , உங்களுக்கும் உயர்ந்த தரிசனங்கள், வாக்குத்தத்தங்களை கர்த்தர் கொடுத்திருப்பார். அநேகர் உங்களை அசட்டை பண்ணலாம். கவலைப்படாதீர்கள் (Don’t worry) கர்த்தர் சொன்னதை நிறைவேற்றுவார்.

**“தேவ தரிசனமே நம்முடைய வாழ்க்கையை உந்தித் தள்ளுகிறது”**

## ரைட் சகோதரர்கள்

முதன் முதலில் விமானத்தை கண்டுபிடித்த ரைட் பிரதர்ஸ், இந்த திட்டத்தை சொல்லும் போது ஒருவரும் அங்கீகரிக்கவில்லை. காலங்கள் சென்றது. மனம் தளராத ரைட் பிரதர்ஸ் விமானத்தில் வானில் பயணித்தனர். அநேகர் ஆச்சரியப்பட்டனர். இன்றைக்கு விமான சேவைகள் நமக்கு எவ்வளவு உதவியாக இருக்கிறது. மனம்தளராமல் இருக்கும் போது வெற்றி நிச்சயம்.

“தரிசனம் இல்லாத இடங்களில் ஜனங்கள் சீர்கெட்டுப்போவார்கள்.”

நாம் ஒவ்வொருவரும் இந்த பூமியில் சும்மா வரவில்லை. நம்மை குறித்து ஒரு தரிசனமும், திட்டமும் தேவனுக்கு உண்டு. அதை முதலில் அறிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு பார்க்கும் திறன் இல்லை என்றால் அவனால் எதையும் பார்க்க முடியாது.

அதை போலத்தான் தரிசனம் (Vision) இல்லாதவர்களால் எதையும் சாதிக்க இயலாது. உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் மட்டும் வாழ்க்கையில்லை. நம்மை குறித்து தேவதிட்டம் என்ன என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தேவன் நமக்கு அதை வெளிப்படுத்துவார்.




**நம்முடைய காலங்கள் அவர் கரத்திலிருக்கிறது என்று வேதம் சொல்லுகிறது. ஆகவே தேவன் நம்முடைய வாழ்க்கையை குறித்த திட்டத்தை வைத்திருக்கிறார்.**
**தேவன் வைத்திருக்கும் திட்டத்தை நிறைவேற்ற ஆற்றலையும், திறமையையும் அவரே நமக்கு தந்து இருக்கிறார்.வாய்ப்புகளை தேவன் நமக்கு உருவாக்கித் தருகிறார்.**
**கடின உழைப்பும், சுறுசுறுப்பும் தேவை.மனம் தளராமல் இருக்க வேண்டும்.**

என்னை குறித்து தேவனின் நல்ல திட்டங்கள் என்ன ?

என்னுடைய வாழ்க்கை தேவ திட்டத்திற்கு சரியாக ஒத்து இருக்கிறதா?





## Action Steps

**ஜெபம்**



அன்புள்ள ஆண்டவரே நீர் என்னை ஒரு நோக்கத்திற்காகவும், திட்டத்திற்காகவும் இப்பூமியில் படைத்திருக்கிறீர். அதை அறிந்து கொள்ளவும், அதற்காக வாழவும் எனக்கு உதவி செய்யும். இயேசு நாமத்தில் ஆமென்.

# 6 நேர்மறையான பார்வை



*Positive view*

**நாம் எதிர்கொள்ளும் சவால்களில், நாம் மட்டும் சந்திப்பதாக கருதாமல், தேவன் நம்மோடு இருக்கிறார் என்ற நிச்சயத்தோடு அணுகவேண்டும்.**

**எண்ணாகமம் 13 , 2 கொரி 10:5**

## கானான் அறிக்கை

மோசே வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தை வேவு பார்ப்பதற்கு 12 பேரை அனுப்பினார். 40 நாட்கள் சென்ற பின்னர் அவர்கள் அங்கிருந்து திராட்சை குலைகள், மாதுளை, அத்தி பழங்களை கொண்டு வந்தனர். போனவர்களில் 10 பேர், அது பாலும், தேனும் ஓடும் தேசம், அங்குள்ள மக்கள் நம்மைவிட பலசாலிகள், நம்மால் அவர்களை எதிர்கொள்ள முடியாது என்று கூறினார்கள். ஆனால் காலேபும் யோசுவாவுமோ, அப்படிச் சொல்லாமல் நாம் அவர்களை எளிதாய் ஜெயித்து விடலாம் என்று சொன்னார்கள்.

## இரண்டு விதமான தகவல்கள்

10 பேர் தான் பார்த்ததை அப்படியே சொன்னார்கள். தங்களைக் குறித்து தாழ்வாகவே மதிப்பீடு செய்திருந்தனர். ஆனால் யோசுவா, காலேப், மாத்திரம் தேவன் நம்மோடு இருக்கிறார் என்று உயர்வாக பார்த்தனர். தங்களைக் குறித்து உயர்வான மதிப்பீடு இருந்தது. அதனால் காலேபும், யோசுவாவும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானானுக்குள் நுழைந்தனர். மற்றவர்கள் போகவில்லை

## தாவீது Defeat கோலியாத்

தாவீது கோலியாத்தை வீழ்த்தியது இந்த விதத்திலே. தாவீது தன்கூட தேவன் இருக்கிறார் என்று விசுவாசம் வெற்றியைத் தந்தது.

## நடைமுறை சவால்கள்

* கல்வி கற்பது சிலருக்கு கடினமாக இருக்கலாம்

* வேலை வாய்ப்பு

* நண்பர்களால் வரும் தவறான பழக்கவழக்கங்கள்

* இந்த வாலிப வயதில் வரும் (பாலியியல்) ஈர்ப்பு

* குடும்ப பொருளாதார பிரச்சனைகள்

* போட்டி நிறைந்த உலகம்

* பாவ சிந்தனைகள்

இந்த எல்லா சூழ்நிலையிலும் தேவன் நமக்கு வெற்றியைத் தருகிறார்

‘‘கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எங்களை வெற்றி சிறக்கப் பண்ணி, எல்லா இடங்களில் எங்களைக் கொண்டு அவரை அறிகிற வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்’’ 2 கொரி 2;14

எந்த சூழ்நிலையிலும் நமக்கு வெற்றி கொடுக்கிற இயேசு நமக்குள் இருக்கிறார் என்ற விசுவாசம் நமக்கு வேண்டும்.

| சூழ்நிலை | ஆண்டவருடைய வார்த்தை |
|---|---|
| எதிர்காலத்தை குறித்து பயம் | என் காலங்கள் அவருடைய கரத்தில் இருக்கிறது |
| பொருளாதார சிக்கல்கள் | என் தேவன் அவருடைய ஐசுவரியத்தின்படி என் குறைகளை நிறைவாக்குவார் |
| உதவி செய்வோர் இல்லை | கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார் |
| தோல்வி | எப்பொழுதும், எல்லா இடங்களிலும் ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு ஸ்தோத்திரம் |
| பாவத்தை குறித்த எண்ணம் | அவரே நமக்கு நீதியும், பரிசுத்தமானவர் |
| பலவீனம் | என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு |

**எல்லா எதிர்மறையான எண்ணங்களையும் (Thoughts, words) வார்த்தைகளையும், நம்மைவிட்டு அகற்றி விடவேண்டும்.**
**விசுவாச எண்ணங்களையும், நேர்மறையான(Positive) சிந்தனைகளை வளர்த்து கொள்ளக் வேண்டும்.**



பிரச்சனையான நேரங்களில் எப்படி நடந்து கொள்கிறேன்?

சவால்களை எவ்வாறு அணுகுகிறேன்?

என்னுடைய பிரச்சனையின் தீர்வுக்கு தேவனை சார்ந்து கொள்கிறேனா?



## Action Steps

## ஜெபம்



அன்புள்ள ஆண்டவரே! என்னுடைய வாழ்வில் வரும் எல்லா பிரச்சனைகளையும் மேற்கொள்ள உதவி செய்யும் விசுவாசத்தினாலும் ,உம்முடைய பெலத்தினாலும் மேற்கொள்ள எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தினாலே ஆமென்.

# 7 தேவன் தந்த துணிவு

(கிதியோன்)



**தேவன் சாதாரண மக்களை வைத்து அசாதாரணமான காரியங்களை செய்கிறவர். பெலனற்றவர்களாக நம்மை நாம் நினைக்கும் போது அவருடைய ஆற்றலை நமக்கு தருகிறார்.**

நியா. 6 - 8

2 தீமோ 1:7 *தேவன் நமக்குப் பயமுள்ள ஆவியைக் கொடாமல், பலமும் அன்பும் தெளிந்த புத்தியுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார்.*

அநேக நேரங்களில் நம்மை நாமே நொந்து கொள்கிறோம். ஏனென்றால் நம்முடைய வாழ்க்கையில் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் நம்மால் முன்னேற முடியவில்லையே என்ற வருத்தம் நமக்குள் எழுகிறது. காரணம் பொருளாதார சூழ்நிலை, கல்வி, சமுதாய பின்னணி, நம்மை சுற்றியுள்ள மக்களின் சோர்வான வார்த்தைகள். இவையெல்லாம் பார்த்து விட்டு இவ்வளவுதான் நம் வாழ்க்கை என்று நம்மை நாமே குறைத்து மதிப்பீடு செய்து கொள்கிறோம்.

ஒரு முறை பல தவளைகள் ஒரு மலையின் மேல் ஏற முயற்சித்தன. அப்பொழுது அங்கே இருந்த மற்ற மிருகங்கள் இந்த தவளைகளால் ஒன்றும் மலையில் ஏற முடியாது என்று கூறிக் கொண்டே இருந்தன.

இதை கேட்டு ஏறி கொண்டிருந்த தவளைகள் ஒன்றன்பின் ஒன்றாக பின்வாங்கியது. ஒரு தவளை மட்டும் மலையின் உச்சிக்கு கடந்து சென்று விட்டது. அந்த தவளைக்கு மற்றவர்கள் சொன்ன வார்த்தைகள் காதில் விழவில்லை. தன்னுடைய குறிக்கோளில் மட்டும் கவனம் செலுத்தி மலையின் உச்சிக்கு ஏறியது. எல்லா மிருகங்களுக்கும், தவளைகளுக்கும் ஆச்சரியம். எல்லாம் போய் அந்த தவளையிடம் 'உன் வெற்றியின் ரகசியம் என்ன' என்று விசாரித்தன. அப்பொழுது தான் அவைகளுக்கு புரிந்தது அந்த தவளைக்கு காது கேட்காது என்று.

## கிதியோன் (நியா 6:12)

கிதியோன் கோதுமையை போரடித்துக் கொண்டிருந்தபோது கர்த்தர் கிதியோனைப் பார்த்து, "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்றார்.

ஆனால் கிதியோனுக்கு அந்த வார்த்தையை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதற்குப் பதில் தன் பலவீன நிலைமையைத் தேவனிடம் சொல்லத் தொடங்கினான். சூழ்நிலையையும், தன்னுடைய குடும்பப் பின்னணியையும் பற்றி கூறினான்.

ஆனால் கர்த்தர் கிதியோனைப் பார்த்த விதம் வேறு. கிதியோன் தன்னை குறித்து பார்த்த பார்வை வேறு. கிதியோனுக்குத் தன்னுடன் பேசுகிறது தேவன்தானா என்கிற சந்தேகம். ஆனாலும் தேவன் அவரைப் பல விதங்களில் அவனுக்கு தன்னை உறுதிப்படுத்தினார்.

## கிதியோனின் வெற்றி

கர்த்தர் கிதியோனைச் சந்தித்தார். ஜனங்களை யுத்தத்திற்கு அழைத்து வரச்சொன்னார். அதன் பிறகு பலவித சோதனைகளுக்கு பிறகு 300 பேரோடும், எக்காளம், பானை, தீவட்டி போன்ற சாதாரண பொருட்களை ஆயுதமாக எடுத்துச் சென்றனர். எக்காளம் ஊதி, தீவட்டி பானை உடைத்தபோது கர்த்தர் கிதியோனுக்கு வெற்றி கொடுத்தார்.




**கிதியோனை போல நாமும்கூட நம்மை குறித்து குறைவாக மதிப்பீடு செய்திருக்கலாம். ஆனால் தேவன் நம்மை குறித்து உயர்வான மதிப்பீடு வைத்திருக்கிறார்.**
**தேவன் செய்ய போகும் பெரிய அற்புதங்களுக்கு, நம்மிடம் உள்ள தாழ்வு மனப்பான்மையை எடுத்துப்போட்டுவிட்டு, தேவனையும், அவருடைய வார்த்தையையும் விசுவாசிக்க வேண்டும்.**



என்னிடம் உள்ள தாழ்வு மனப்பான்மை என்ன?ஏன்?

என்னுடைய எதிர்காலத்தை , என்னுடைய குடும்ப சூழ்நிலை, பொருளாதாரம், கல்வியை வைத்து நிர்ணயிக்கிறேனா? அல்லது தேவனுடைய வாக்குத்தத்தங்களின் அடிப்படையில் இருக்கிறதா?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, என்னிடத்தில் உள்ள எல்லா தாழ்வு மனப்பான்மையும், பயம், போன்றவைகள் வெளியேறட்டும். வெற்றியின் எண்ணங்களை எனக்குத் தாரும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 8 சரியானதை தீர்மானித்தல்




## Right Decision

**நம்முடைய வெற்றியின் வாழ்விற்கு மிகவும் அடிப்படையாக நாம் எதை தெரிந்து கொள்கிறோம் என்பதை பொறுத்து அமைகிறது.**

**உபாகமம் 30:19**

*“நான் ஜீவனையும், மரணத்தையும் ஆசீர்வாதத்தையும் சாபத்தையும், உனக்கு முன் வைத்தேன் என்று உங்கள் மேல் வானத்தையும், பூமியையும் இன்று சாட்சி வைக்கிறேன். ஆகையால் நீயும் உன் சந்ததியும், பிழைக்கும்படி நீ ஜீவனைத் தெரிந்து கொண்டு...”*

ஒரு காட்டில் ஒரு பூனையும் ஒரு கோழியும் ஒருவரையொருவர் சந்தித்தனர். பூனை கோழியிடம் ஒரு புலி இங்கு வந்தால் நீ என்ன செய்வாய் என்றது. அதற்கு கோழி “மரத்தில் ஏறிக்கொள்வேன்” என்றது. அதற்கு பூனை ஏளனமாய், “உனக்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. எனக்கு பல வழிகள் இருக்கிறது. தாவி சென்றுவிட முடியும். மரத்தின் மேல் ஏறிவிட முடியும், வேகமாக ஓடி தப்பி செல்ல முடியும்” என பல வழிகளை சொன்னது. திடீரென்று ஒரு புலி அந்த இடத்திற்கு வந்தது. கோழி உடனே மரத்தில் ஏறிக்கொண்டது. பூனை அதே இடத்தில் நின்றது. ஏனென்றால் எந்த வழியைத் தெரிந்து கொள்வது என்பதில் குழப்பம் அடைந்தது. அதனால் புலியிடம் வசமாக மாட்டிக் கொண்டது.

இதே போலத்தான், நாமும்கூட அநேக நேரங்களில் சரியானதை தெரிந்து கொள்ளாமல் பிரச்சனைகளில் மாட்டிக் கொள்கிறோம்.

## ஆதாம் ஏவாள்

ஆதாம் ஏவாளை ஆண்டவர் படைத்தபோது எல்லாவற்றையும் அனுபவிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டது. ஒரு கனியைத் தவிர. அவர்களுக்கு தெரிந்து கொள்ளும் அதிகாரம் (choosing power) இருந்தது. ஆனாலும் சாத்தானின் வஞ்சனையான தூண்டுதலினால் தவறானதைத் தெரிந்து கொண்டார்கள். அதனால் தேவனுடைய சாபத்திற்கு ஆளானார்கள். தங்களுடைய உன்னத வாழ்வை இழந்தனர். தேவன் நமக்கு தெரிந்து கொள்ளும் உரிமையும், அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார். ஆதலால் நாம் சரியானதை தெரிந்து கொள்ள வேண்டும்.

தேவன் நமக்கு உதவி செய்ய வேத வசனங்களையும், பரிசுத்த ஆவியானவரையும், அநேக ஆவிக்குரிய தலைவர்களையும், நண்பர்களையும் கொடுத்துள்ளார்.

## ரூத் நகோமி (ரூத் 1:16)

ரூத் என்ற மோவாபிய பெண் தன்னுடைய இளம் வயதில் கணவனை இழந்தாள். இந்த சூழ்நிலையில் இரண்டு வாய்ப்புகள் இருந்தது. ஒன்று தன்னுடைய பெற்றோர் வீட்டிற்கு போவது மற்றொன்று மாமியாரோடு இருக்கலாம். ரூத் தன்னுடைய மாமியுடன் இருந்து விட்டாள். அதனால் தேவன் அவளுடைய வாழ்க்கையை போவாஸ் மூலம் ஆசீர்வாதமாக மாற்றினார். இன்று இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம் பெற்றாள் (மத்தேயு 1:5).

## தானியேல்

தானியேல் அடிமையாகதான் கொண்டு போகப்பட்டார். அந்நிய தேசத்தில், அவர்களுக்கு சிறப்பான விருந்து இருந்தது. திராட்சரசம் (மதுபானம்) மாமிச உணவுகள் (பாகாலுக்கு பலியிடப்பட்ட) ஆனால் தானியேல் ராஜாவின் போஜனத்தினாலும், அவர் பானம்பண்ணும் திராட்சரசத்தினாலும் தன்னை தீட்டுப்படுத்தலாகாதென்று தன் இருதயத்தில் தீர்மானம் பண்ணினான். தேவனும் மனிதர் கண்களில் இரக்கம் கிடைக்கச் செய்தார். அதேபோல் மற்றவர்களை காட்டிலும் விசேஷித்தவனாகக் காணப்பட்டார்.

## யோசேப்பு

தன்னுடைய வாலிப வயதில் போத்திபார் மனைவியின் கவர்ச்சிக்கும், தவறான உறவுக்கும், தன்னை விலக்கி அதைவிட்டு விலகி ஓடி பரிசுத்தமாக வாழ தீர்மானித்தான். தேவன் பெரிய உயர்வை கொடுத்தார்.

## இன்றைக்கு இருக்கும் சவால்கள் (Today Challenges)



Face book, Youtube, Whatsapp, Smartphone, Sms,Google.

ஒவ்வொரு நாளும் இதை கடந்துதான் போகிறோம். காலையில் எழுந்தவுடனே நாம் நம்மிடம் வந்துள்ள செய்திகளைப் பார்க்கிறோம். எதைப் பார்க்கிறோம். நம்முடைய இச்சைகளை தூண்டக்கூடியதா அல்லது பக்தி விருத்திக்கு உண்டானதா? இந்த காலத்தில் பாலுணர்வுகளைத் தூண்டக்கூடிய அநேக புகைப்படங்கள், செய்திகள், குறும்படங்கள் நம்மை சுற்றி வருகிறது. நாம் எதை தெரிந்து கொள்கிறோம். no சொல்கிறோமா? yes சொல்கிறோமா? தானியேல் மனதில் தீர்மானம் எடுத்தான். நாமும் அப்படி செய்ய பழகவேண்டும்.

## சரியான தீர்மானம் (Right Decision)

1. ஜெபமும், வேத தியானமும், அனுதினமும் இருக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படவும், நடத்தப்படவும் வேண்டும்.

2. நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற நிலையில் இருந்து தீர்மானம் எடுக்க வேண்டும்.(யோவான் 1:12)

3. நாம் எடுக்கும் தீர்மானங்கள் தேவனை பிரியபடுத்துவதாக இருக்க வேண்டும்,

4. தரமான ஆவிக்குரிய தலைவர்கள், போதகர் ஆலோசனை பெற வேண்டும். (நீதிமொழிகள் 11:14)

5. பெற்றோர்களிடம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

6. வருங்கால முன்னேற்றத்தை மனதில் கொண்டு தீர்மானிக்க வேண்டும்




1. தரமற்ற நண்பர்களின் ஐக்கியத்தையும், ஆலோசனையையும் தவிர்க்க வேண்டும்.

2. குழப்பமான சூழ்நிலையில் தீர்மானங்களைக் எடுக்கக்கூடாது.

3. மகிழ்ச்சியான, மற்றும் துன்பமான நேரங்களில் தீர்மானம் எடுக்ககூடாது.

4. குறுகிய கால பயனுக்காக தீர்மானம் எடுக்கக்கூடாது.

5. நம்முடைய சுயநலனுக்காக தீரமானம் எடுக்கக்கூடாது.




**நாம் எடுக்கும் தீர்மானத்தை பொறுத்தே நம்முடைய வெற்றியின் வாழ்வு தொடங்குகிறது**



எந்த அடிப்படையில் என் தீர்மானம் இருக்கிறது?

நான் எடுக்கும் தீர்மானங்கள் தேவனை துக்கப்படுத்துமா அல்லது மகிமைப்படுத்துமா?

தீர்மானம் எடுக்கும் முன் தன்னிச்சையாக செயல்படுகிறேனா? அல்லது மற்றவர்களிடம் ஆலோசித்த பின் எடுக்கிறேனா?

தீர்மானம் எடுக்கும் முன் பின் விளைவுகளை யோசிப்பது உண்டா?



## Action Steps

## ஜெபம்



அன்புள்ள ஆண்டவரே நான் தரமான தீர்மானங்களை எடுக்க எனக்கு உதவிசெய்யும். நான் எடுக்கும் தீர்மானம் உம்மை மகிமைப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.



# 9 ஜெபம்

*Connecting with God*

**ஜெபம் மனிதனுக்கும், தேவனுக்கும் இடையே இருக்கிற உறவுபாலம். தேவன் மனிதனை படைத்ததே அவரோடு ஐக்கியமாக இருப்பதற்காகதான். வெற்றியுள்ள வாழ்க்கைக்கு ஜெபம் மிகவும் அவசியம்.**

*என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன். யோவான் 14:14*

எரேமியா 33:3 பிலி 4;6

இன்றைக்கு நாம் பயன்படுத்தும் மொபைல் போன்களில் அதிகமான வசதிகள் இருக்கிறது. Whatsapp, Facebook, Sms, Youtube, Google. இன்னும் எத்தனையோ வசதிகள் இருக்கிறது. இதில் Battery Charge போய்விட்டால் நம்மக்கு இந்த போன்களால் எந்த பயனும் இருக்காது. ஆகவே தினமும் Mobile Phone சரியாக செயல்படுவதற்கு தினமும் Charge போடுகிறோம். மேலும் Power Bank பயன்படுத்தி பேட்டரி சார்ஜ் இறங்காமல் பார்த்து கொள்கிறோம். ஆகவே Mobile போனுக்கு சார்ஜ் மிகவும்முக்கியமாக இருக்கிறது. அதே போல்தான் நாம் வெற்றியுடன் வாழ்வதற்கு ஜெபம் அவசியமாகிறது.

## அடிப்படை

நாம் யாரிடம் அதிகமாக பேசுகிறோம்? நம்மை நேசிக்கிறவர்கள், நம் மீது அக்கறை உள்ளவர்களிடம், காரணம் நேசமும் அன்பும் தான். ஜெபமும் அப்படித்தான். அன்புதான் ஜெபத்திற்கு அடிப்படையாக இருக்க வேண்டும். ஏதோ நாமெல்லாம் கிறிஸ்தவர்கள் ஆகவே கண்டிப்பாக ஜெபிக்க வேண்டும் என்ற கட்டாயம் அல்ல. அப்படிபட்ட ஜெபம் பெயரளவுக்குத்தான் இருக்கும். தேவன் என்னை எந்த நிபந்தனையும் இல்லாமல் (Un Conditional) என்னை நேசிக்கிறார். ஆகவே நானும் அவரில் அன்பு கூறுகிறேன் என்ற எண்ணத்தோடு நாம் ஜெபிக்கும்போது, அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. **அன்பின் உரையாடல் தான் ஜெபம்.**

## ஏற்றவேளை

“இடைவிடாமல் ஜெபியுங்கள்” என்று வேதம் கூறுகிறது. ஜெபத்திற்கு நேரம் நாம் ஒதுக்க வேண்டும். காலையில் ஜெபிப்பது மிகவும் நல்லது, நமது மனதும்,உடலும் Fresh ஆக இருக்கும். மற்றவர்களின் இடையூறு இருக்காது. மற்றபடி எப்பொழுதெல்லாம் நேரம் கிடைக்கிறதோ, அப்பொழுதெல்லாம் நாம் ஜெபிக்கலாம்

## எவ்வளவு நேரம் ஜெபிப்பது

ஒரு முறை Dr. பில்லிகிரஹாம் ஐயாவிடம் ‘ஐயா நான் எவ்வளவு நேரம் ஜெபிக்க வேண்டும்’ என்று வாலிபன் கேட்டான். அதற்கு அவர் ‘5 நிமிடத்தில் தொடங்கி நாளுக்கு நாள் நேரத்தை அதிகரி’ என்றார். ஆகவே நாம் ஜெபிக்கும் போது நேரத்தை திட்டமிடுவதும் அவசியம்தான். போக போக ஜெபம் இனிமையாக மாறிவிடும். இதற்கு ஆவியானவரும் உதவி செய்வார்.

## ஜெபத்தில் நம்முடைய நிலை

* ஆண்டவர் நமக்கு தகப்பன் - பிள்ளை என்ற உறவை கொடுத்திருக்கிறார் (யோவா 1:12) ஆகவே பிள்ளைகள் தகப்பனிடம் உரிமையுடன் கேட்பது போல் நாம் இருக்க வேண்டும். (பிச்சைக்காரர்கள் போல் அல்ல)

* நம்முடைய ஜெபங்களுக்கு பதில் கிடைக்கும் என்ற மனநிலை நமக்கு வேண்டும். (யாக் 1:16)

* சரியான நோக்கம் உடையவர்களாக இருக்க வேண்டும். (யாக் 4:2-3)

* தேவன் நமக்கு சிறந்ததை (Best) தருவார் என்ற எண்ணம் வேண்டும். (மத் 7:11)

* நாம் நீதிமான்கள் என்ற மனநிலை நமக்கு வேண்டும். (2 கொரி 6:11, 1 யோவான் 5:14)

## ஜெப மாதிரி

### துதி (Praise)

நாம் ஜெபத்தை துதியோடு ஆரம்பிக்க வேண்டும். சங்கீ 100:4 “அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிரகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்”. துதி என்பது தேவன் எப்படிப்பட்டவர் என்பதை சொல்வது.

அவருடைய நாமம், யேகோவாயீரே, யேகோவாஷம்மா, எபேனேசர் என்று எத்தனையோ நாமங்கள் வேதத்தில் உண்டு. அதையெல்லாம் கூறி அவரை உயர்த்தி பாடல் பாடலாம்.

### ஸ்தோத்திரம் (Thanks giving)

தேவன் நமக்கு செய்த நன்மைகளை நினைவு கூர்ந்து அவருக்கு நன்றி செலுத்தவேண்டும். தேவன் நமக்கு எவ்வளவோ நன்மை செய்திருக்கிறார், அதையும் சொல்லி நன்றி கூறலாம். (2கொரி 9:15, 1தெச 5:18)

### உறவை மேம்படுத்துதல் (Repent)

தேவனையும், மனிதனையும் பிரிப்பது பாவம். ஆகவே நாம் ஏதாவது பாவம் செய்திருந்தால் தேவனிடம் அறிக்கையிட்டு பாவத்தை விட்டுவிட வேண்டும். இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

### வேதவாசிப்பு

நாம் கிரமமாக வேதத்தை வாசித்து தியானிக்க வேண்டும். வேதத்தை கேளாதவரின் ஜெபம் அருவருப்பானது. ஆகவே வேதத்தை முறையாக வாசிக்க வேண்டும். புதிதாக வேதத்தை வாசிப்பவர்கள் புதிய ஏற்பாட்டில் யோவான் புத்தகத்தை வாசிக்க ஆரம்பிக்கலாம். (விரிவான ,தகவலுக்கு வேதம் என்ற பாடத்தில் கூறப்பட்டுள்ளது)

### விண்ணப்பம் (Request)

நம் தேவன் நாம் நினைப்பதற்கும், வேண்டுவதற்கும் மிகவும் அதிகமாய் செய்கிறவர். என் நாமத்தில் நீங்கள் எதை கேட்டாலும் நான் உங்களுக்கு செய்வேன் என்று ஆண்டவர் கூறியுள்ளார்.

### யாருக்காக ஜெபிப்பது



1 முதலில் நாம் நமக்கு வேண்டுதல் செய்ய வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கைக்கும், ஆசீர்வாதமான வாழ்க்கைக்கும் நம்முடைய தேவைகளுக்கும் ஜெபிக்கலாம்.

2 நண்பர்களுக்கும், உறவினர்களுக்காகவும் ஜெபிக்கலாம்.

3 மற்றவர்கள் கூறும் ஜெபக்குறிப்புகளுக்கு ஜெபிக்கலாம்.

4 எல்லா வித ஊழியர்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும் ஜெபிக்கலாம்.

5 தேசத்தின் தலைவர்கள், ஆளுகின்றவர்களுக்காகவும் ஜெபிக்கலாம்.

6 தெரிந்தவர்களின் இரட்சிப்பிற்காகவும் ஜெபிக்கலாம்.

7 நம் தேசத்திற்காகவும் ஜெபிக்கலாம். அதிக தகவல்களுக்கு (முழங்கால் யுத்தம் புத்தகம் )

## ஜெப கையேடு பயன்படுத்தலாம்

## ஜெபத்தின் விதம்

### விசுவாசமும்-ஜெபமும்

ஜெபிக்கும்போது நாம் ஜெபித்த காரியங்களுக்கு பதில் கிடைக்கும் என்ற விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். (யாக்கோபு 1:6)

Prayer + Faith = Answer

ஜெபம் + விசுவாசம் = பதில் *கிடைக்கும்.*

### வேத வசனத்தின் அடிப்படையில் ஜெபம்

நாம் ஜெபிக்கும் போது வேத வசனத்தின் அடிப்படையில் ஜெபிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் படி ஜெபிக்கும் போது அது வல்லமையுள்ளது. ‘‘என் தேவன் அவருடைய ஐசுவரியத்தின்படி

என் குறைகளையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்'' என்று நம்முடைய குறைவுகளில் இந்த வசனத்தை பயன்படுத்தி ஜெபிக்கலாம்.

## பரிசுத்த ஆவியில் ஜெபிக்க வேண்டும்

ஒரு சில நேரங்களில் ஜெபிக்கும் போது பரிசுத்த ஆவியானவர் ஜெபிக்க உதவுகிறார். அந்நியபாஷைகளில் ஜெபிக்க வேண்டும். அந்நியபாஷையில் ஜெபிக்கும் போது அநேக மறைவான காரியங்களுக்கும் ஜெபம் செய்கிறோம். 1 கொரி. 14:4,5 தேவனோடு இரகசியங்களை பேசுகிறோம்.

## உபவாச ஜெபம்

மோசே, எஸ்தர், இயேசு கிறிஸ்து, பவுல், ஆகியோர் உபவாசித்து ஜெபித்து ஜெயம் பெற்று இருக்கிறார்கள். தேவ ஆவியானவர் நடத்துதல் படி உபவாசம் எடுக்க வேண்டும். போதகர், மற்றும் ஆவிக்குரிய ஆலோசகரிடம் ஆலோசனை கேட்டு உபவாசித்து ஜெபிக்கலாம்.




**ஜெபம் தேவனையும் மனிதனையும் இணைக்கும் உறவு பாலம்.**
**ஜெபம் தேவனை பூமியில் செயல்பட வைக்கிறது. ஜெபம் தேவனால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட வெற்றியை சுதந்தரிக்க கொடுக்கப்பட்ட திறவு கோல்.(key)**



என் வாழ்வில் ஜெபத்திற்கு நேரம் ஒதுக்கிறேனா?

விருப்பத்தோடு ஜெபிக்கிறேனா? அல்லது கடமைக்காக ஜெபிக்கிறேனா?

ஆவியானவர் உதவியோடு ஜெபிக்கிறேனா?

தினமும் ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறேனா?



## Action Steps



### ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே எனக்கு ஜெபிக்கும் ஆர்வத்தை தாரும், ஜெப ஆவியால் என்னை நிரப்பும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 10 வேதம்



*Listening to God*

**நாம் ஆரோக்கியமாய் வாழ்வதற்கு சத்தான ஆகாரம் தேவை. அதுபோல நம்முடைய (ஆவிக்குரிய) உள்ளான மனிதன் வாழ்வதற்கு வேத வசனம் அவசியமாய் இருக்கிறது.**

சங்கீ 119:9 *வாலிபன் தன் வழியை எதினால் சுத்தம் பண்ணுவான். உமது வசனத்தின்படி தன்னை காத்துக்கொள்கிறதினால் தானே.*

சங்கீதம் 1:2 *கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்...சங்கீதம் 1:3 அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்.*

அன்பு நண்பர்களே, இந்த உலகத்தில் நாம் வாழ்வதற்கு சூரியன், சந்திரன், மற்றும் மின்சாரம் (Electricity) அவசியம். அவைகள் இல்லாதிருந்தால் நாம் இருட்டில்தான் இருக்க வேண்டும். நாம் தெளிவாக பொருட்களைப் பார்ப்பதற்கு, இடங்களுக்கு போவதற்கு நமக்கு வெளிச்சம் அவசியம். அதுபோல நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் வெற்றியாக வாழ்வதற்கு கர்த்தருடைய வசனம் நமக்கு உதவி செய்கிறது.

## வேதவசனம் தேவனுடைய வார்த்தை

தேவனுடைய மனிதர்கள் தேவ ஆவியின் ஏவுதலினால் வேத வசனங்களை எழுதியிருக்கிறார்கள். முதன் முதலில் தோல் சுருளில் எழுதப்பட்டு, பின் நாட்களில் அறிவியல் முன்னேற்றத்தினால் புத்தகமாக அச்சடிக்கப்பட்டது.

பழைய ஏற்பாடு எபிரெய மொழியிலும் புதிய ஏற்பாடு கிரேக்க மொழியிலும் எழுதப்பட்டது. பிற்காலங்களில் அவரவர் தாய் மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது. 1715 ஆம் ஆண்டு சீகன் பால்க்கு என்ற ஜெர்மன் தேசத்தை சேர்ந்த வாலிபன் தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்தார்.

## தேவனுடைய வார்த்தையும் - வாக்குத்தத்தமும்

தேவன், மனிதனுக்காக வைத்திருக்கும் அனைத்து வாக்குதத்தங்களும் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது. தேவனுடைய வார்த்தைகளை நாம் அறிந்து கொள்ளும் போது தேவனுடைய ஆசீர்வாதங்கள் நம்முடைய வாழ்வில் செயல்படும்.

## கற்பாறையில் கட்டின வீடு

இரண்டு பேர் வீடு கட்டினார்கள் ஒருவன் மணல்மீதும், மற்றவன் கற்பாறையின் மீதும். ஒரு நாள் மழை பெய்து, வெள்ளம் வந்தது. மணல் மீது கட்டினவனின் வீடு இடிந்தது. கற்பாறையின் மீது கட்டினவன் வீடு நிலைத்து நின்றது. நாம் தேவ வசனத்தின்படி நம்முடைய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் போது நாம் கற்பாறையில் கட்டின வீடு போல நிலைத்து நிற்போம். ஒன்றும் நம்மை சேதப்படுத்தாது.

## வசனம் ஆவியின் பட்டயம் (எபேசி 6:17)

தேவன் நமக்கு பிசாசை தாக்கும் ஆயுதமாக வேத வசனத்தை கொடுத்திருக்கிறார். ஆண்டவர் இயேசுவை சாத்தான் சோதித்த போது வேத வசனத்தை கொண்டு ஜெயித்தார். ‘‘வாலிபரே நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும் தேவ வசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும் உங்களுக்கு எழுதுகிறேன்’’ (1 யோவான் 2:14) வேத வசனமே நமக்கு வெற்றியை பெற்று தருகிறது.

வேத வசனங்கள் தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதப்பட்டது. ஆகவே பரிசுத்த ஆவியானவர் உதவி இல்லாமல் இதனை புரிந்து கொள்ள முடியாது. ஆகவே ஜெபத்தோடும், ஆவியானவர் உதவியோடு வேதத்தை வாசிக்க வேண்டும்.

## எப்படி வேதத்தை தியானிப்பது

வேதத்தை தியானிப்பதற்கு அநேக முறைகள் உண்டு. இங்கு எளிய முறை ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது.

### முன் ஆயத்தம்

வேதத்தை தியானிக்கு முன், கொஞ்சம் அமைதலான இடம் நல்லது. பைபிள், பேனா, நோட், கலர் பேனா, எடுத்து கொள்ள வேண்டும். ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஆங்கில வேதாகமத்தையும் எடுத்து கொள்ளுங்கள்.

புதியதாக வாசிப்பவர்கள் யோவான் புத்தகத்திலிருந்து ஆரம்பியுங்கள்.

மற்ற புத்தகங்களை காட்டிலும் சத்தியம் எளிமையாக, புரிந்து கொள்ளும் வகையில் இருக்கும். வேதத்தை அங்கொன்றும் இங்கொன்றும் எடுத்து வாசிக்கக் கூடாது, கிரமமாக வரிசையாக வாசித்து தியானிக்க வேண்டும். ஒரே நாளில் முழு அதிகாரத்தை வாசிக்க வேண்டும் என்று அவசியமில்லை. கொஞ்சமாக வாசித்து, தியானித்து நம்முடைய வாழ்க்கைக்கு பயன்படுத்த வேண்டும். நேரம் இருந்தால் அதிகமாக வாசிக்கலாம். ஒரு வேத பகுதியை ஒன்று, இரண்டு முறை வாசிக்க வேண்டும். பின்னர் கீழ்காணும் முறையை பயன்படுத்துங்கள்.

## மாதிரி தியானம் யோவான் 1:1-12

### 1. செய்தி (Message)

நாம் படித்த இந்த பகுதியில் என்ன செய்தி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

‘‘ஆண்டவராகிய இயேசுவை குறித்து சொல்லப்படுகிறது செய்தி’’

### 2. வாக்குத்தத்தம் Promise, (Conditionl & Unconditional)

இந்த பகுதியில் நமக்கு கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தம் என்ன?

யோவா 1:12

"நாம் அவரை ஏற்றுக் கொள்ளும் போது பிள்ளையாக மாறுகிறோம்."

### 3. கட்டளை (Command) V&12

நாம் கீழ்ப்படிவதற்கு என்ன கட்டளை கொடுக்கப்பட்டிருக்கிறது "நாம் இயேசுவை சொந்த இரட்சகராக் ஏற்றுக் கொள்ள வேண்டும்"

### 4. தேவனுடைய குணாதிசயம் (God's Character)

இந்த பகுதியில் தேவனை பற்றி என்ன கூறப்பட்டுள்ளன.

யோவான் 1:9 தேவன் ஒளியாய் இருக்கிறார்.

### 5. தனிப்பட்ட வாழ்வில் நடைமுறைபடுத்த வேண்டியது (Personal Application)

1. நான் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று கொள்ளுவேன்.
2. நான் தேவனுடைய பிள்ளையாய் இருக்கிறேன். அதுபோல என் வாழ்க்கை இருக்கும்.
3. தேவன் ஒளியாய் எனக்குள் இருக்கிறார். நான் வெற்றியாய் வாழ்வேன்.

மேலே கொடுக்கப்பட்ட வேத தியானம் ஒரு மாதிரி. ஆரம்ப நாட்களுக்கு பிரயோஜனமாக இருக்கும். படிப்படியாக நீங்கள் வாசிக்கும் போது அநேக வெளிப்பாடுகளை தேவன் தருவார்.

"ஜெபம் - நாம் தேவனோடு பேசுவது"

"வேதத்தை வாசிப்பது - தேவன் நம்மோடு பேசுவது"




**தேவனுடைய வார்த்தை மனிதனுடைய வாழ்க்கையை தேவ தூரத்திற்கு மாற்றுகிறது**



வேத தியானத்திற்கு நான் எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறேன்?

வேத வசனத்திற்கு ஏற்ப என் வாழ்க்கையை மாற்றிக் கொள்கிறேனா?



## Action Steps

**நீங்கள் வளரும்படி, புதிதாய்ப் பிறந்த குழந்தைகளைப்போல, திருவசனமாகிய களங்கமில்லாத ஞானப்பாலின்மேல் வாஞ்சையாயிருங்கள்**. 1 பேதுரு 2:3



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே ஒவ்வொரு நாளும் உம்முடைய வார்த்தைகளை வாசிக்கவும் தியானிக்கவும் எனக்கு கிருபையையும், ஆர்வத்தையும் தாரும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 11 தேவ சித்தத்தை தெரிந்துக் கொள்ளுதல்



## *Finding God's Will*

**ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் தேவன் ஒரு சிறந்த திட்டத்தை வைத்திருக்கிறார். அந்த திட்டத்தை நாம் அறிந்து கொள்வதும், அந்தத் திட்டத்திற்கு நம் வாழ்க்கையை அர்ப்பணித்து கொள்ளும் போது, நமக்கு வெற்றியுள்ள வாழ்க்கை அமைகிறது.**

மத் 7:21.

---

---

---

*" நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன் உன்மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்"* (சங்கீ 32:8)

ஒருமுறை ஒரு சிறுவன் தன்னுடைய வீட்டின் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அப்பொழுது ஒரு செடியை பார்த்தான் அதில் ஒரு சிறுகூடு போல் ஒன்று தொங்கி கொண்டிருந்தது. உடனே அவன் தன் தகப்பனை அழைத்து வந்தான். தான் கண்டதை காண்பித்தான். தகப்பன் 'மகனே இது வண்ணத்து பூச்சி புழு இது கூட்டுப்புழுவாக இருக்கிறது. இன்னும் கொஞ்ச நாளில் இது அழகான வண்ணத்து பூச்சியாக வெளிவந்து பறந்து விடும்' என்றார். மறுநாள் அந்த சிறுவனுக்கு ஒரு ஆசை, எப்படியாவது வண்ணத்து பூச்சியை பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டான். உடனே வீட்டில் ஒரு பிளேடு எடுத்து வந்து அந்த கூட்டு புழுவை கிழித்து பார்த்தான் உள்ளே மிக மோசமான தோற்றத்தோடு வண்ணத்து பூச்சி இருந்தது. அது பூமியில் விழுந்து இறந்து போனது. காலத்திற்கு முன்பாக அது உடைக்கப்பட்டதால் அதன் வாழ்க்கை அழிவில் முடிந்துபோனது.

இதை வாசிக்கின்ற நண்பர்களே நம்மையும் ஆண்டவர் இப்படித்தான் உண்டாக்கி இருக்கிறார். தேவ திட்டத்திற்கும், நேரத்திற்கும் முன்பாக நாம் செயல்படும் போது நம்முடைய வாழ்க்கை தோல்வியை சந்திக்க நேரிடும்(மோசே).

## யோனா

ஆண்டவர் யோனாவை அழைத்து தன்னுடைய திட்டத்திற்காக நினிவேவிற்கு போகச் சொன்னார். ஆனால் யோனா கர்த்தருக்கு கீழ்ப்படியாமல் திட்டத்தை மாற்றி தர்ஷீசுக்கு செல்வதற்காக கப்பலில் பிரயாணப்பட்டான். இதன் விளைவாக கப்பல் பிரச்சனையில் மாட்டியது, பின்னர் யோனா கடலில் வீசப்பட்டு மீனின் வயிற்றில் மூன்று நாட்கள் இருந்து மனம் திரும்பினான். கடைசியில் தேவ திட்டத்தின்படி நினிவேக்கு சென்று கர்த்தருடைய வார்த்தையை பிரசங்கித்தான்.

## இயேசு கிறிஸ்து

இயேசு கிறிஸ்து இந்த பூமியில் வாழும் போது 100% பிதாவின் திட்டத்தையும், சித்தத்தையும் செய்து கொண்டுவந்தார். தான் சிலுவைக்கு போகுமுன் பிதாவின் சித்தத்தை நிறைவேற்ற ஜெபித்தார். மத் 26:30 41, 42 .ஆகவே தேவனுடைய சித்தத்தை நாம் செய்யும்போது பரிபூரண வாழ்க்கை நமக்கு கிடைக்கும்.




## தேவனுடைய சித்தத்தை அறிந்து கொள்ளுதல்

### ஆயத்தம்

* இயேசுவை நாம் சொந்த இரட்சராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.
* தேவ சித்தம் நிறைவேற நம் இருதயத்தை மனப்பூர்வமாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.
* பரிசுத்த ஆவியானவரின் ஆளுகைக்கும், நடத்துதலுக்கும் ஒப்புக்கொடுக்க வேண்டும்.
* ஜெபம், வேதவாசிப்பு அனுதினமும் இருக்க வேண்டும்.
* தேவன் நமக்கு நன்மையானதை செய்வார் என்ற விசுவாசம் வேண்டும்.
* தேவனுடைய நேரத்திற்கு பொறுமையோடு காத்திருக்க வேண்டும்.

## தேவசித்தத்தை அறிந்து கொள்ள சில அடிப்படை அறிகுறிகள்

### 1. சமாதானம் (Inner Peace)

நாம் அவருடைய சித்தத்தை செய்யும் போது ஆண்டவருடைய சமாதானம் நம்மை ஆளுகை செய்யும். (கொலே 3:15).

### 2. வேதவசனத்தின் படி உறுதி (Confirm with the Word)

நாம் ஆண்டவருடைய சித்தம் செய்ய தேவனே தம்முடைய வார்த்தைகளினால் நமக்கு உறுதிப்படுத்துவார் மற்றவர்கள் சொல்வதை வைத்து அல்ல. தேவன் முதலில் நமக்கு அவருடைய வார்த்தையின்படி வெளிப்படுத்துவார்.

### 3. உள்ளான விருப்பம் (Inner desire)

பிலி: 2:3 ''ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்''

தேவனே அவருடைய சித்தத்தை செய்ய மனவிருப்பத்தை உண்டாக்குகிறார்.

### 4. தரமான ஆவிக்குரிய, போதகர்கள், தலைவர்கள், நண்பர்கள் ஆலோசனை

தேவனின் சித்தத்தை நாம் செய்ய அநேக ஆவிக்குரிய மக்களின் ஆலோசனையினாலும் உறுதிப்படும். (நீதி: 11:14.)

### 5. சாதகமான சூழ்நிலை (Favorable Situation)

நாம் அவருடைய சித்தத்தை வாழ்க்கையில் செய்யும் போது நமக்கு ஏற்ற சாதகமான சூழ்நிலை நமக்கு ஏற்படும். அதை ஆண்டவரே ஏற்படுத்தி தருவார்.

### 6. ஒரு மனம் (Oneness)

திருமணத்தில் முடிவு செய்யும் போது இரண்டு நபர்களிடமும் ஒரு மனம் ஏற்படும். குழப்பங்கள் இருக்காது.

### 7. தரிசனம், தீர்க்கதரிசனம் (Vision & Prophecy)

சில நேரங்களில் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளை பயன்படுத்தி அவருடைய சித்தத்தை வெளிப்படுத்தலாம். நமக்கும் தரிசனம் மூலமும் பேசலாம்.

## தேவ சித்தம் செய்ய ஏற்படும் தடை



1. நாம் நம் சொந்த உணர்ச்சிகளை சார்ந்து கொள்ள கூடாது. (Don't depend upon your feelings)
2. பழைய அனுபவங்களை சார்ந்து முடிவு எடுக்ககூடாது. (மோசே) முதல்முறை தண்ணீர் வருவிக்க

கன்மலையை அடிக்கச் சொன்னார். இரண்டாம் முறை கன்மலையிடம் பேச சொன்னார். ஆனால் மோசே அடித்தார்.

3. நாம் தேவனைவிட நமது திறமையை சார்ந்து கொள்ள கூடாது (Don't depend upon your skills)

(அப்போஸ்தலர் பவுல் வார்த்தையை மீறி கப்பல் மாலுமி, திறமை சார்ந்து பயணத்தை தொடர்ந்தார் மிகப் பெரிய சேதம் ஏற்பட்டது. அப். 27:11)

4. ஆவிக்குரிய மந்த நிலை (Spiritual Weakness)

ஜெபமின்மை

வேதவாசிப்பு குறைவு

ஆவியானவரின் ஐக்கிய குறைவு




**நம்முடைய நல்ல வெற்றியுள்ள எதிர்காலம் தேவனிடத்தில்தான் இருக்கிறது. ஆகவே நாம் முழுமையாக அவருடைய திட்டத்திற்கும் சித்தத்திற்கும் ஒப்புக் கொடுக்க வேண்டும்.**



என்னுடைய வாழ்க்கையில் தேவசித்தத்தை நிறைவேற்றுகிறேனா?

ஒவ்வொரு நாளும் தேவசித்தத்தை நிறைவேற்ற விரும்புகிறேனா?

தேவன் எனக்கு நல்ல எதிர்காலத்தை வைத்திருக்கிறார் என்ற விசுவாசம் உண்டா?



## Action Steps

## ஜெபம்



அன்புள்ள ஆண்டவரே என்னுடைய வாழ்வில் 100% உம்முடைய சித்தம் நிறைவேற ஒப்புக்கொடுக்கிறேன். என் வாழ்வில் உம்முடைய சித்தம் மாத்திரம் நிறைவேறட்டும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 12 சோதனையில் வெற்றி



## *Overcoming Temptations*

**உலகில் வாழும் நமக்கு பல விதங்களிலும் ஈர்ப்புகள் ஏற்படுகிறது. இந்த எல்லா வித ஈர்ப்புகளிலும் இருந்து நமக்கு ஆண்டவர் வெற்றி கொடுக்கிறார்.**

*எபிரெயர்2:18. ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.*

### பனிக்கரடி

பனிப்பிரதேசங்களில் வேட்டைக்காரர்கள் கரடிகளை பிடிப்பதற்காக கூர்மையான கத்தியில் மிருகங்களின் இரத்தத்தை தடவி பனியில் புதைத்து விடுவார்கள். இரத்த வாசனை நுகர்ந்து கரடிகள் அங்கு வந்து கத்தியில் தடவி இருக்கும் இரத்தத்தை நக்கி ருசிக்க ஆரம்பிக்கும், பின்னர் கூர்மையான கத்தி இந்த கரடியின் நாக்கில் பட்டு இரத்தம் வரும் தன் நாக்கில் வரும் இரத்தத்தை ருசிப்பதால் தன் காயத்தை மறந்து இரத்தத்தை சுவைக்கும். சிறிது நேரத்தில் இரத்தம் எல்லாம் வெளியேறி கரடி மயங்கி விழுந்து விடும். வேட்டைக்காரர்கள் கரடியை கொன்று விடுவார்கள். அற்பமான ஒரு சில துளி இரத்தத்திற்கு தன்னுடைய உயிரை இழந்து விடும்.

இதைப் போலத்தான் நம்முடைய வாழ்க்கையிலும் ஒரு சில தவறான ஈர்ப்புகள்(wrongattractions) நம்முடைய வாழ்க்கையை முற்றிலும் அழித்து விடுகிறது.

### விருப்பங்களில் தவறில்லை

தேவன் நம்மை படைக்கும் போது ஆசைகள், விருப்பங்கள், உணர்ச்சிகள், எல்லாவற்றோடும் படைத்திருக்கிறார். ஈர்ப்புகள் ஏற்படுவது பாவம் அல்ல. அந்த ஈர்ப்புகளை தவறான முறையில் அடைவதும், நாடுவதும், அனுபவிக்கிறதும் பாவம்.

உதாரணமாக நாம் ரோட்டில் நடந்து செல்கிறோம். போகும்வழியில் ஒரு கேக் கடையில் அருமையான கேக் நமக்கு பிடித்திருக்கிறது. உடனே போய் நாம் அதற்குறிய பணத்தை கொடுத்து வாங்கி ருசிப்பதில் தவறில்லை. அதற்குப் பதிலாக திருட்டுத்தனமாக கடைக்காரனை ஏமாற்றி நாம் சாப்பிடும் போது தவறாகிறது.

## சோதனை, (Temptation) தேவனிடத்திலிருந்து வருவதில்லை

யாக் (1:13-15)

*சோதிக்கப்படுகிற எவனும் நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக. தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல. ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல. அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு சோதிக்கப்படுகிறான்.*

*பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கும். பாவம் பூரணமாகும் போது மரணத்தை பிறப்பிக்கும்.*

## சோதனை எவ்வாறு வருகிறது

1 யோவான் 2:16

*ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல. அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.*

## மூன்று விதங்களில் அதிகமாக சோதனை வருகிறது

### 1. மாம்சத்தின் இச்சை (Lust of the flesh)

தேவன் மனிதனை படைக்கும் போது விருப்பங்களையும், பாலியல் உணர்ச்சிகளையும் கொடுத்திருக்கிறார். இவைகள் பார்வையிலும், தொடுதல் மூலமாகவும் தூண்டப்படுகிறது. இந்த உணர்ச்சிகளும், உணர்வுகளும், எல்லா விருப்பங்களும், தவறில்லை.

ஆனால் தவறான முறையில் அனுபவிப்பதும், தவறான முறையில் அடைவதும் பாவம்.

உதாரணமாக பாலியியல் உணர்வுகள் பாவம் இல்லை. ஆனால் திருமணத்திற்கு முன், அதை அனுபவிப்பது பாவமாகும். பவுல் கூறும் போது ‘‘வேசித்தனத்திற்கு விலகி ஓடு’’ என்று கூறுகிறார்.

நம்முடைய சரீரம் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறது. பவுல் ‘‘*நான் என் மாம்சத்தையும், அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறேன்* என்றார். கண்களின் இச்சைதான் மாம்ச இச்சைக்கு வழியாக இருக்கிறது.

### 2. கண்களின் இச்சை (Lust of the eyes)

நம்முடைய உடல் உறுப்புகளில் மிகவும் முக்கியமானது கண்கள். இது சரீரத்தின் விளக்காய் இருக்கிறது. கண் கெட்டால் சரீரம் முழுவதும் இருளாகும். (மத் 6:22)

முதன் முதலில் ஏவாள் பாவம் செய்ய தூண்டியது கண்களின் இச்சைதான். தேவன் விலக்கிய கனி பார்வைக்கு இன்பமாயிருந்தது (ஆதி 3:6) என்று வேதம் கூறுகிறது. கண்களின் பார்வை தான் பாவம் செய்யும் உணர்வுகளை தூண்டுகிறது. ஆகவே கண்கள் முக்கியம்.

நாம் பார்ப்பது தவறில்லை. அதை எப்படிப் பார்க்கிறோம் என்பது தான் முக்கியம். “இயேசு சொன்னார். “பெண்களை இச்சையோடு பார்க்கிறவன், பெண்களோடு விபச்சாரம் செய்வதற்கு சமம்” என்றார்.

ஏவாள், சிம்சோன், தாவீது போன்றோர் கண்களின் இச்சையில் பாவம் செய்ய தூண்டப்பட்டவர்கள். ஆகவே நம்முடைய பார்வை சரியாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும்.

## 3. ஜீவனத்தின் பெருமை (Pride of Life)

தேவன் நம்மை எல்லா விதத்திலும் ஆசீர்வதித்திருக்கிறார். நமக்கு திறமைகள், தாலந்துகள், கல்வியறிவு, பதவி, பொருளதாரம் மற்றும் சமுதாயத்தில் உயர்வு இருக்கலாம். அதனால் நாம் பெருமை கொள்ள கூடாது.

மற்றவர்களை நாம் தாழ்வாகவும், இழிவாகவும் நடத்தக் கூடாது.

எல்லா மனிதர்களும் தேவனுடைய படைப்புகளாய் இருக்கிறார்கள். நாம் எல்லோரையும் சமமாக எண்ண வேண்டும்.

## எப்படி ஜெயம் எடுப்பது (How can you overcome)

### 1 ஜெபம் (Prayer)

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு மாதிரி ஜெபத்தைக் கற்றுக் கொடுக்கும் போது மத் 6:13 “எங்களை சோதனைக்குட்பட பண்ணாமல் தீமையின்று எங்களை இரட்சித்து கொள்ளும்” என்ற வார்த்தையை கற்றுக் கொடுத்தார். ஆகவே நாம் சோதனையை மேற்கொள்ள தினமும் ஜெபிக்க வேண்டும். அப்பொழுது அந்த நாளுக்குரிய எல்லா சோதனையிலும் வெற்றி பெற நமக்கு தேவகிருபை, பெலனும் உண்டாகும்.

### 2 உள்ளான மனிதனில் பலப்படுதல் (Strengthening the innerman)

நம்முடைய சரீரம் பெலனடைவதற்கு சத்தான உணவு உண்கிறோம், உடற்பயிற்சி செய்கிறோம். அதனால் நாம் பலனடைகிறோம். அது போல நம்முடைய உள்ளான மனிதன் பெலனடைவதற்கு தினமும் ஜெபம், வேத வாசிப்பு, ஆராதனை, அபிஷேகம் மற்றும் நல்ல ஐக்கியம் தேவை. இதன் மூலம் நம்முடைய உள்ளான மனிதன் பலனடைவான். அதனால் எல்லா வித சோதனையிலும் ஜெயம் கிடைக்கும்.

### 3 சோதனைகள் வரும் இடங்களையும், சூழ்நிலைகளையும் தவிர்க்க வேண்டும்

நாம் எந்த இடங்களில் சோதிக்கப்படுகிறோமோ அந்த இடங்களை தவிர்க்க வேண்டும். உதாரணமாக (Internet cafe, TV, Mobile) யோசேப்பு தனக்கு வந்த சோதனையில் இருந்து தப்பி ஓடினான் என்று வேதத்தில் பார்க்கிறோம். ஆரம்பத்திலே இதை செய்ய வேண்டும்.

### 4 கிறிஸ்துவுக்குள் நாம் யார் என்ற அறிவு வேண்டும்

நாம் இயேசு ஆண்டவரை ஏற்றுக் கொண்டபின் நாம் அவரின் பிள்ளைகளாக இருக்கிறோம். மேலும் நாம் பரிசுத்தவான்கள், நீதிமான்கள், ராஜரீக ஆசாரிய கூட்டம் என்றும் வேதம் உயர்வாய்

நம்மைக் கூறுகிறது. நாம் எப்படிப்பட்டவர்கள் என்ற உணர்வு வரும் போது அப்படிப்பட்டவர்களாக செயல்படுகிறோம். இழிவான எண்ணங்கள், செயல்கள் செய்யமாட்டோம்.

## 5 ஆண்டவரின் பலத்தை சார்ந்து கொள்ள வேண்டும்

நாம் நம்முடைய சுய பெலத்தால் எதையும் மேற்கொள்ள முடியாது. பிலி 4:13 என்னை *பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு.*" என்று பார்க்கிறோம்.

எபிரெ 2:18 "*அவர் தாமே சோதிக்கப்பட்டுப் பாடுப்பட்டதினாலே அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்*" *ஆகவே தேவன் எல்லா சோதனைகளையும் மேற்கொள்ள உதவி செய்வார்.*

## 6 தவறான நட்புகளை தவிர்க்க வேண்டும்

நம்மை தவறான வழியில் நடத்தக் கூடிய நண்பர்களை தவிர்த்திட வேண்டும். தவறான நண்பர்கள் செய்யும் தவறுகளினால் நாமும் தவறுகள் செய்ய தூண்டப்படுகிறோம். ஆகவே இப்படிப்பட்டவர்களை விட்டு விலக வேண்டும்.

## 7 தவறான ஈர்ப்புக்கள்

மற்றவர்களை ஈர்க்க கூடிய வகையில் நம்முடைய உடை, பாவனைகள், பேச்சுகள், செயல்கள் இருக்கக்கூடாது.

## 8 நாம் செய்யும் தவறுகளை நியாயமாக்க கூடாது (Dont compromise)

அநேக நேரங்களில் நாம் செய்யும் தவறுகளை நியாயமாக்குகிறோம். வாலிப நாட்களில் இதெல்லாம் சகஜம் என்று எண்ணக்கூடாது.

கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தி யுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள். (பிலி 4:18)

**Son Conscious - not Sin Conscious : நாம் அநேக நேரங்களில் பாவம் செய்து விடுவோமோ என்னும் பயந்த சிந்தனையுள்ளது. அதனால் சோதனை நேரத்தில் விழுந்து விடுகிறோம். அதற்கு மாறாக பரிசுத்த சிந்தனை நமக்கு வேண்டும். நான் தேவனுடைய பிள்ளை என்று எண்ண வேண்டும்.**



என்னுடைய வாழ்வில் எந்த விதத்தில் சோதனை வருகிறது?

சோதனை நேரங்களில் என்னுடைய அணுகுமுறை எவ்வாறு இருக்கிறது?

சோதனை வரும் சூழ்நிலைகளை நான் தவிர்க்கிறேனா அல்லது ஒத்துப் போகிறேனா?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே எல்லா சோதனைகளையும் ஜெயித்தவரே என்னுடைய வாழ்வில் வரும் எல்லா வித சோதனையையும் ஜெயிக்க எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 13 குற்ற உணர்விலிருந்து விடுதலை

## Deliverance from Guilt



**குற்ற உணர்வு சாத்தானால் தூண்டப்படுகிறது.**
**இது மனிதனையும், தேவனையும் பிரிக்கிறது.**

*"நம்முடைய பாவத்தை கடலின் அடியில்" (மீகா 7:19)*

*"கிழக்கு-மேற்கும் தூரப்படுத்திவிட்டார்" (சங் 103:12)*

*எபிரெயர் 10:17,*

***1 யோவான் 1:9***

### மன்னிப்பு

ஒரு கோடைகாலத்தில் ரமேஷ், ராணி என்ற அண்ணனும், தங்கையும் தன்னுடைய தாத்தா வீட்டிற்கு சென்றனர். தாத்தாவிற்கு ஒரே மகிழ்ச்சி. பேரப்பிள்ளைகளுக்கு விளையாட்டு பொருட்கள் மற்றும் இனிப்புகள் வாங்க கடைக்கு செல்ல புறப்பட்டார். புறப்படுவதற்குமுன் "பிள்ளைகளா சண்டை போடாமல் விளையாடுங்கள் நம்முடைய தோட்டத்தில் வாத்து இருக்கிறது. அதன் அருகே போகாதீர்கள்" என்று சொல்லி விட்டு கடைக்கு சென்றார். ரமேஷ், ராணியும் பந்து எறிந்து விளையாடிக்கொண்டிருந்தனர். விளையாடும்போது ரமேஷ் பந்தை எறிந்துபோது தோட்டத்திலிருக்கும் வாத்து மீது பட்டு வாத்து உடனே இறந்து விட்டது. ரமேஷ் இதைக் கண்டவுடனே பயந்தே போய்விட்டான். உடனே வாத்தை குழிதோண்டி புதைத்துவிட்டான். இதையெல்லாம் ராணி பார்த்து கொண்டே இருந்தாள். தாத்தாவும் வந்து விட்டார். தாத்தா ராணிக்கு சிறிய வேலையைக் கொடுத்தார். ஆனால் ராணி ரமேஷிடம் இந்த வேலை செய் என்றாள். ரமேஷ் மறுத்தான். உடனே ராணி "வாத்து" என்றாள். உடனே ரமேஷ் என்ன வாத்தா என்றான்.ராணி உடனே ரமேஷிடம் "நீ வாத்தை கொன்றதைத் தாத்தாவிடம் சொல்லுவேன்" என்று கூறி மிரட்டி அடிக்கடி வேலை வாங்கினாள்.

ஒரு நாள் ரொம்ப சோர்ந்து போன ரமேஷ் தாத்தாவிடம் போய் நடந்ததை பயத்துடன் சொன்னான். தாத்தா "எல்லாமே எனக்கு தெரியும் நான் எப்பவோ உன்னை மன்னித்துவிட்டேன்." என்றார். ரமேஷிக்கு ரொம்ப சந்தோஷம்.

ராணி மீண்டும் அவனிடம் மிரட்டி வேலை செய்ய சொன்னாள். ரமேஷ் முடியாது என்றான், அதற்கு ராணி "வாத்து" என்றாள். அது நேத்து என்றான். தான் எல்லாவற்றையும் தாத்தாவிடம் கூறியதைக் கூறினான். ராணி வெட்கி தலை குனிந்தாள்.

ரமேஷ் விடுதலையாக சந்தோஷமாக விளையாடினான்.

## மன்னிக்கும் தேவன்

ஒரு வேளை நாமும்கூட இப்படித்தான் சின்ன பாவங்களை செய்துவிட்டு, குற்ற உணர்வினால் தேவனை விட்டு தூரம் போகிறோம்.

*"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்." (நீதி 28:13)*

நம்முடைய அனுதின வாழ்வில் சிறிய தவறுகள் செய்தாலும் தேவனிடத்தில் மன்னிப்பு கேட்டு பழக வேண்டும்.

நம் ஆண்டவர் மன்னிக்கும் தேவன்.

## அனுதினமும் ஆராய்தல்

நாம் ஜெபம் செய்யும்போது முதலாவது நம்மை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நம்முடைய வாழ்வில் பாவம் இருந்தால் அது தேவனைவிட்டு நம்மை பிரிக்கும். ஆகவே அனுதினம் நம்மை தற்பரிசோதனை செய்வது நல்லது.

அநேகர் பாவம் செய்து தேவனிடத்தில் அறிக்கை செய்யாததினால் குற்ற உணர்வு உண்டாகிறது. இது பிசாசினிடத்திலிருந்து வருகிறது. இதனால் அநேகர் தேவனை விட்டு பின்வாங்கிபோகிறார்கள்.

இயேசு கிறிஸ்து 2000 ஆண்டுகளுக்கு முன்பாக நம்முடைய கடந்த கால, நிகழ்கால, வருங்கால எல்லா பாவங்களுக்காக தண்டனையைச் சிலுவையில் ஏற்கனவே செய்து முடித்துவிட்டார்.

### குற்ற உணர்வின் விளைவுகள்

1. தேவனின் அன்பைப் விட்டுப் பிரிக்கிறது.
2. ஜெபம், வேத வாசிப்பு, ஐக்கியம், ஊழியம் எல்லாவற்றிலும் நாட்டம் இல்லாமல் செய்துவிடும்.
3. பாவத்தை செய்யத் தூண்டும்.

   (பாவி என்ற எண்ணம் நமக்குள் இருப்பதால்)
4. தேவனைக் குறித்து தவறான மதிப்பீடு ஏற்படும்
5. மனச்சோர்வு, கவலை, சமாதானமின்மை ஏற்படும்.
6. தவறான எண்ணங்கள் உருவாகும்.

## கெட்ட குமாரன்

லூக்கா 15: 11-32

ஒரு தகப்பனுக்கு இரண்டு குமாரர்கள் இருந்தார்கள். ஒருவன் தன் சொத்தை பிரித்து கொண்டு, தன்னுடைய கெட்ட நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு எல்லாவற்றையும் அழித்துப் போட்டான். ஒரு வேளை உணவு கூட இல்லாமல் தவித்தான், பன்றிக்கு போடும் உணவை சாப்பிட நினைத்தான். ஆனால் புத்தி தெளிந்த போது தன் தகப்பனிடத்தில் போய் பிள்ளையாக அல்ல, வேலைக்காரனாக சேர்ந்து கொள்ள வந்தான்.

ஆனால் தகப்பன் அவனை பிள்ளையாகத்தான் பார்த்தார். அனைத்து அந்தஸ்துகளையும் திரும்பக் கொடுத்தார்.

ஒரு வேளை நாமும்கூட பாவம் செய்யும்போது இந்த மனநிலை வருகிறது. பாவி என்று நாம் எண்ணுகிறோம். ஆனால் தேவன் நம்மை பிள்ளையாகத்தான் பார்க்கிறார். ஐக்கியத்தில்தான் நாம் தவறு செய்து விட்டோம். தேவனுக்கு விரோதமான பாவம் செய்து, அவருக்கு களங்கம் ஏற்படுத்துகிறோம். நம்முடைய உறவில் எந்த மாற்றமும் இல்லை. நமக்கும் அவருக்கும் தகப்பன், பிள்ளை என்ற உறவு தொடர்கிறது. ஆகவே சிறிய பாவமானாலும் நாம் அறிக்கை செய்து பாவத்தை விட்டுவிட வேண்டும். தேவனுக்கும் நமக்கும் இருக்கும் ஐக்கியத்தை விடக்கூடாது.




**நம்முடைய தேவன் மன்னிக்கும் தேவன் விலையேறப்பட்ட இயேசுவின் இரத்தத்தினாலே நாம் மீட்கப்பட்டிருக்கிறோம்.**

நான் சிறு பாவம் செய்யும் போது தேவனிடத்தில் அறிக்கை செய்கிறேனா அல்லது கண்டு கொள்ளவில்லையா?



## Action Steps



## ஜெபம்



அன்புள்ள ஆண்டவரே! என்னுடைய பாவங்களுக்காக கல்வாரிச் சிலுவையில் இரத்தம் சிந்தி பெரிய மீட்பை உண்டு பண்ணியிருப்பதற்காக நன்றி. என்னுடைய எல்லா பாவங்களையும் எனக்கு மன்னியும். எல்லா குற்ற உணர்வுகளையும் நீக்கி எனக்கு விடுதலை தாரும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.



# 14 இயேசு ஏன் இந்த பூமிக்கு வந்தார்

## *Why Jesus came to this World?*

**வீழ்ந்து போன மனுக்குலத்தை மீட்டு, தேவனோடு இணைத்து புது வாழ்வை கொடுப்பதற்காக வந்தவர் இயேசு. (ஏசாயா 9:6. 53: 1 - 10)**

யோவான் 3:16

லூக்கா 19:10 *இழந்து போனதை தேடவும்*

ஒரு முறை ஒரு சிறுவன் தன்னுடைய தகப்பனோடு கூட நடந்து போய் கொண்டிருந்தான். போகும் வழியில் ஒரு எறும்பு கூட்டத்தை பார்த்து நின்றான் அதில் ஒரு சில எறும்புகள் காயப்பட்டு வேதனைப்பட்டு கொண்டிருந்தது. உடனே அந்த சிறுவன் தன் தகப்பனிடம் ‘‘அப்பா இந்த எறும்புகள் மிகவும் கஷ்டப்படுகிறது நான் எப்படியாவது உதவி செய்ய வேண்டும்’’ என்று கேட்டான். அதற்கு தகப்பன் ‘‘மகனே நம்மால் இந்த எறும்புகளுக்கு உதவி செய்ய முடியாது, நாம் எறும்பு போல் மாறினால் மட்டுமே இதற்கு நாம் உதவி செய்ய முடியும்’’ என்றார். இதை போல தான் இயேசுவும் மனிதர்களை மீட்பதற்காக மனுஷனாய் இந்த பூமிக்கு வந்தார்.

ஆண்டவர் மனிதனை தன்னுடைய சாயலாகவும் தம்முடைய ரூபத்தின்படியும் படைத்தார். தேவனுக்கும் மனிதனுக்கும் நல்ல உறவு இருந்தது.

## ஆதாமின் வீழ்ச்சி

ஆதாம் கீழ்படியாமையின் விளைவால் மனுக்குலத்தில் பாவம் நுழைந்தது. அதனால் மனிதன் பிசாசுக்கும், பாவத்திற்கும் அடிமைப்பட்டு, உன்னத வாழ்வை இழந்தான்.

ரோமர் 3:23 ‘‘எல்லாரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி’’

பாவத்தினால் மனிதனுக்கும் தேவனுக்கும் பெரிய பிளவு ஏற்பட்டது.

## நியாயப்பிரமாணம்

தேவன் மோசேக்கு நியாப்பிரமாணத்தை கொடுத்தார். அநேக பாவ பரிகாரமும் பலிகளும் கொடுக்கப்பட்டது. ஆனாலும் மனிதர்களால் அதை பின்பற்ற முடிவில்லை. நியாயப்பிரமாணமும் ஒருவரையும் தேவனுக்கு முன்பாக நீதிமான்னாக்க முடியவில்லை. இதனால் மனிதர்கள் மீண்டும் சாபத்திற்கு ஆளானார்கள்.

## ஒரே தீர்வு இயேசு

தேவன் அன்புள்ளவர், மனிதர்களை நேசித்தார் மீண்டும், மனிதனுக்கும் தேவனுக்கும் உறவை புதுப்பிக்க இயேசு இந்த பூமிக்கு வந்தார். 33 1/2 ஆண்டுகள் இந்த பூமியில் வாழ்ந்தார். அநேகருக்கு அற்புதங்களையும், அதிசங்களையும் செய்தார். வேத வார்த்தையின் படி சீடன் யூதாஸ்காரியோத்தால் காட்டி கொடுக்கப்பட்டு பிலாத்து என்பவரால் சிலுவையில் அறைய ஒப்புக்கொடுக்கப்பட்டார். கொடுமையான மரண தண்டனையான சிலுவையில் அறையப்பட்டார். வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்.

## இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்ததின் நோக்கம்

1. பாவத்திலும், சாபத்திலும் இருந்த ஜனங்களை விடுதலை செய்ய, மத் 1:21
2. பாவங்களுக்காக மிருகங்களின் இரத்த பலிகளை நிறுத்தி தானே மனிதர்களின் பாவங்களுக்காக ஒரே தரம் பலியானர்.எபிரெ 9:12
3. தேவனுக்கும் மனிதர்களுக்கும் உறவை ஏற்படுத்த ,யோவான் 1:12. தகப்பன் - பிள்ளை.
4. பிசாசின் கிரியையையும், வல்லமையையும் அழிக்கும்படியாக,
5. தேவன் எப்பொழுதும் மனிதர்களோடு தங்கும் படி பரிசுத்த ஆவியானவரை தந்தருள,
6. நியாயப்பிரமாணத்திற்கு முடிவு கொண்டு வந்தார். அன்பின் பிரமாணத்தை கொண்டு வந்தார். கலா 5:14
7. நித்திய நித்தியமாக பரலோகம் செல்லும் வழியை உண்டுபண்ணினார்.

   ''நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன்.'' (யோவான் 14:6)

## ஏன் இயேசுவை நான் ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக் கொள்ள வேண்டும்?

### 1. பாவமன்னிப்பு

''பாவத்தின் சம்பளம் மரணம்'' ரோமர் 3:23 உலகத்தில் மனிதர்கள் செய்யும் பாவத்திற்கு இயேசு மாத்திரமே அதற்கான தண்டனையை சிலுவையிலே செய்து முடித்தார். இயேசுவின் இரத்தம் மட்டுமே மனிதனை பரிசுத்தமாக்க முடியும். எந்த கிரியை செய்தாலும், தானதர்மம், நற்காரியங்கள், புண்ணியம், ஒன்றும் மனிதனுக்கு பாவத்திலிருந்து மீட்பையும், மன்னிப்பையும் கொடுக்காது.

### 2. பரிசுத்தம்/நீதி

உலகில் எந்த ஒரு மனிதனும் சுயமாய் பரிசுத்தமாய் வாழ முடியாது. இயேசுவை ஏற்று கொள்ளும்போது நம்மோடு தங்கவும், பாவத்தை மேற்கொள்ளவும், நமக்கு பரிசுத்த ஆவியினை தருகிறார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

3. நம்முடைய எல்லா பாவங்களுக்கும், எல்லா மீறுதலுக்கும் இயேசு மாத்திரமே சிலுவையில் தண்டனையை ஏற்றுக் கொண்டு நம்மை பாவதண்டனைகளுக்கு விடுதலையாக்கி விட்டார்.

4. உலகம் கொடுக்க முடியாத சமாதானம் இயேசுவிடம் மட்டுமே உண்டு.

5. நிபந்தனையில்லாமல் அன்பு (Unconditional love) செலுத்துகிறவர் இயேசு மாத்திரமே.

6. நாம் நித்திய நித்தியமாக பரலோகம் செல்லும் ஒரே வழி இயேசு மாத்திரமே.

7. நாம் ஆண்டவருடைய பிள்ளையாக வாழ நம்மை பூமியில் அதிகாரமுடையவராக மாற்றி இருக்கிறார்.




**தனிப்பட்ட முறையில் நாம் இயேசுவை சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்று கொள்ளும் போது ஆண்டவரின் எல்லா ஆசீர்வாதங்களும் நமக்கு கிடைக்கும்.**



இயேசு இந்த பூமிக்கு வந்ததன் நோக்கம் என்னுடைய வாழ்வில் எப்படி பிரயோஜனப்படுகிறது?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே என்னுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்ததற்காக நன்றி. இன்று உம்மை என் இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக் கொள்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 15 சிலுவையில் நடந்த தெய்வீக பரிமாற்றங்கள்



*Divine Exchange at the Cross*

**மனுக்குலத்தின் மீட்பிற்காக இயேசு எல்லா தண்டனைகளையும் ஏற்று கொண்டு மனிதனை விடுவித்தார்.**

ஏசாயா 53:5

## விடுதலை

ஒரு கிராமத்தில் ரவி, குமார் என்று இரண்டு சகோதரர்கள் இருந்தனர். ரவி நல்ல மனிதனாக வாழ்ந்து வந்தான். ஆனால் குமார் கெட்ட நண்பர்களோடு இணைந்து கொலை, கொள்ளையில், ஈடுபட்டு வந்தான். ரவி தன்னுடைய தம்பியை அதிகமாய் நேசித்தான், எவ்வளவோ ஆலோசனை சொல்லியும் மனம் திருந்தவில்லை. ஒரு நாள் இரவு ரவி தன்னுடைய வீட்டில் தூங்கி கொண்டிருந்தான். திடீரென்று கதவு தட்டு சத்தம் கேட்டு, கதவை திறந்தான் தன் சகோதரன் குமார் இரத்தக்கறையுடன், கத்தியுடன் நின்று கொண்டிருந்தான். பதற்றத்துடன் ''அண்ணா என்னை காப்பாற்று போலீஸ் என்னை தேடி வருகிறது'' என்று கூறினான், உடனே ரவி தன் சகோதரன் இரத்தம் படிந்த உடையை வாங்கி கொண்டு தன்னுடைய நல்ல உடைகளை அவனுக்கு கொடுத்தான். குமாரும் நல்ல உடைகளை போட்டு கொண்டான். சிறிது நேரத்தில் அங்கே போலீஸ் வந்தது. ரத்தம் படிந்த கத்தி இரத்தக் கறை உடையோடு ரவி நின்று கொண்டிருந்தான். போலீஸ் அவனை கைது செய்து, நீதிமன்றத்தில் மரண தண்டனை கொடுத்தது. அதனால் குமார் தண்டனைக்கு தப்பினான். ரவி தன் தம்பிக்காக அவனுடைய குற்றத்தை தான் ஏற்றுக் கொண்டு தம்பியை விடுவித்தான்.

## பாவ தண்டனைக்கு விடுதலை

இது போல தான். மனிதர்கள் செய்யும் எல்லா பாவங்களுக்காக தண்டனையை இயேசு சிலுவையில் ஏற்றுக் கொண்டு நமக்கு விடுதலையைக் கொடுத்தார்.

சிலுவையில் நமக்காக அநேக ஆசீர்வாதங்களை சம்பாதித்து கொடுத்திருக்கிறார். ஒரு சிலவற்றைப்பார்ப்போம்.

### 1. பாவம் – நீதி

உலகில் வாழும் எல்லாரும் பலவிதங்களில் பாவங்களை செய்கின்றனர். இந்த பாவத்திற்குரிய தண்டனையை இயேசு சிலுவையில் ஏற்று கொண்டார்.

2 கொரி 5:21. நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படி பாவம் அறியாத அவரை நமக்காக பாவமாக்கினார். நாம் பாவிகளல்ல ,நீதிமான்கள். நம்முடைய நீதியில் நடந்ததல்ல அவருடைய நீதி நமக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பாவிகள் என்ற எண்ணத்தோடு நாம் வாழக்கூடாது. நீதிமான்கள் என்ற எண்ணத்தோடு நாம் வாழ வேண்டும். ரோம:4:25

(1 பேதுரு 2:24) ____________________

எபிரெயர் 10:10 ____________________

## 2. சாபம் – ஆசீர்வாதம்

சாபம் கொடுமையானது. உபா 28 ல் இந்த சாபப்பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயப்பிரமாணத்தை கடைபிடிக்காவிட்டால் சாபம் வரும். இது மூன்றாம் நான்காம் தலைமுறையையும் பாதிக்கும். இந்த சாபத்திற்கு இயேசு சிலுவையில் முற்று புள்ளி வைத்தார். இந்த சாபத்திற்கான தண்டனையை இயேசு சிலுவையில் ஏற்றுக்கொண்டதன் மூலம் நாம் விடுதலையாக்கப்பட்டோம். ஆசீர்வாதம் நமக்கு கிடைக்கிறது.

கலா 3:13 ‘‘*மரத்தில் தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காக சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டு கொண்டார்*’’.

இப்பொழுது தேவனுடைய அனைத்து ஆசீர்வாதங்களும் நமக்கு கிடைக்கிறது.

## 3. தரித்திரம்(வறுமை) - ஐசுவரியம்

இந்த உலகில் ஒரு பெரிய கொடுமை தரித்திரம், இதனால், வறுமை, பட்டினி, பசி, பற்றாக்குறை, வியாதிகள் போன்றவைகளினால் மனிதன் கஷ்டப்படுகிறான். இதற்கும் ஆண்டவர் ஒரு தீர்வை வைத்திருக்கிறார். ‘‘கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தை தரும்’’ என்று வேதம் கூறுகிறது

நாம் ஆசீர்வாதமாக வாழ்வதுதான் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

கலாத்தியர் *3:29 ‘‘நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்திரராயும் இருக்கிறீர்கள்’’*

*2 கொரிந்தியர் 8:9 ‘‘அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு உங்கள் நிமித்தம் தரித்திரரானரே.’’* நாம் ஐசுவரியவான்களாகும்படி தேவன் இந்த மகத்தான காரியங்களை நமக்காக செய்தார்.

## 4 வியாதி - சுகம், ஆரோக்கியம்

மனிதர்களை மிகவும் பாதிக்கக் கூடியதும், கொடுமையானதும் வியாதிகள். உலகில் வியாதிகள் பலவிதமாக வருகிறது.

1. வைரஸ் மற்றும் கிருமிகளினால்

2. சத்து குறைவு

3. பிசாசின் கிரியை

4. விபத்துக்கள்

5. வயது சென்றதின் மூலம்

6. பாவத்தினால் வரும் வியாதி

ஏசாயா 53:5 "*அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்*"

1 பேதுரு 2:24

"அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்."

எந்தவித வியாதியாக இருந்தாலும் அதை சுகமாக்கும் வல்லமை அவருக்குள் இருக்கிறது. பூமியில் இயேசு வாழ்ந்தபோது எல்லா வியாதியையும் உடனே சுகமாக்கினார். இன்று அவருடைய சத்தியத்தை நாம் விசுவாசிக்கும்போது சுகம் கிடைக்கிறது.

## 5. அடிமைத்தனம் - விடுதலை

இன்றைக்கும் அநேக ஜனங்கள் பாவத்தினாலும், கெட்டப் பழக்கவழக்கங்களினாலும், சூதாட்டத்திலும், கடனிலும் அடிமைப்பட்டு வாழ்க்கையைச் சிறைபடுத்தி கொள்கின்றனர்.

பிலிப்பியர் 2:7 "தம்மை தாமே வெறுமையாக்கி அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்"

நம்மை எல்லா அடிமைத்தனத்திலுருந்து விடுதலையாக்கும்படி தேவன் இதை செய்து முடித்தார்.

## 6. கனவீனம் - கனம்

இயேசு கிறிஸ்து தேவ குமாரனாயிருந்தும், சிலுவையில் கனவீனப்படுத்தப்பட்டார். போர் வீரர்கள் தலையில் முள்முடி சூட்டி அவரை கேவலமாக நடத்தினார்கள்.

"*அழகுமில்லை, சவுந்தரியமில்லை*" என்றே வேதத்தில் பார்க்கிறோம் (ஏசாயா 53:2,3).

நம்மை கனப்படுத்தும்படி தேவன் இதை நமக்காக ஏற்றுக் கொண்டார்.

## 7. தோல்வி - வெற்றி (ஜெயம்)

இயேசு கிறிஸ்து பாடுபட்டு, எல்லாம் கைவிடப்பட்ட நிலையில் தொங்கியதைப் பார்க்கும்போது தோல்வி அடைந்தவராக காணப்பட்டார். ஆனால் மனுக்குலம் வெற்றியுள்ள வாழ்வு வாழ்வதற்காக இதை ஏற்றுக்கொண்டார்.

கொலோ 2:14,15 *நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாகவும் இருந்த கையெழுத்தை குலைத்து அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்து கொண்டு வெளியரங்கமான கோலமாக்கி அவைகளின்மேல் சிலுவையில் வெற்றி சிறந்தார்.*

*"கிறிஸ்துவுக்குள் எப்பொழுதும் எல்லா இடங்களில் வெற்றி" (2 கொரி 2:14)*

இன்றும் அநேக ஆசீர்வாதங்கள் சிலுவையிலிருந்து நமக்கு கிடைக்கிறது. ஆகவேதான் பவுல், "*சிலுவையைக் குறித்து அல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டமாட்டேன்*" என்று கூறுகிறார். விசுவாசியுங்கள், சிலுவையில் கிடைத்த அனைத்து ஆசீர்வாதங்கள் நம்முடையதே.




**மனுக்குலத்திற்கு வெற்றி கொடுக்கப்பட்டதே சிலுவையில்தான், மனிதனுக்குரிய அனைத்து ஆசீர்வாதங்களும் சிலுவையின் மூலமே கிடைக்கிறது.**

இயேசு எனக்காக சிலுவையில் செய்த அத்தனை நன்மைகளையும் நான் விசுவாசிக்கிறேனா?

இந்த எல்லா ஆசீர்வாதங்களும் என்னுடைய வாழ்வில் செயல்படுகிறதா?





## Action Steps

## ஜெபம்



அன்புள்ள ஆண்டவரே, எங்களுக்காக நீர் சிலுவையில் ஏற்படுத்திய எல்லா மீட்பிற்காகவும், ஆசீர்வாதங்களுக்காகவும் நன்றி கூறுகிறேன். எங்களுக்காக சிலுவை பாடுகளை ஏற்றுக்கொண்டதற்காக நன்றி. இந்த எல்லா ஆசீர்வாதங்களும் என் வாழ்வில் கிரியைச் செய்வதாக. அதை நான் விசுவாசிக்கிறேன். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 16 நவீன உலகில் சமநிலை வாழ்வு

## *Be Balanced in the Hi-tech World*



**உலகில் அதி நவீன கண்டு பிடிப்புகளைப் பயன்படுத்துவதில் தவறில்லை. ஆனால் நாம் தேவனுடைய பிள்ளைகள் என்ற தரத்தை விட்டுவிடக்கூடாது.**

1 கொரிந்தியர் 10:23/31

*எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது.*

v-31 ______________________________

______________________________

## அறிவியல் வளர்ச்சி

இன்றைய நவீன உலகில் அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆச்சரியமானது. மனிதர்கள் பல விதங்களில் தன்னுடைய ஆற்றலை வெளிப்படுத்தி தனக்கு அநேக வசதிகளையும், சௌகரியங்களையும், பயன்களையும் அறிவியல் மூலம் அடைந்திருக்கிறார்கள்.

போக்குவரத்து, தொலைதொடர்பு, வீட்டு உபயோகப் பொருட்கள், எல்லாமே அறிவியல் முன்னேற்றத்தை கண்டுள்ளது. அதன் மூலம் நாம் அதிக பயன் அடைகிறோம். குறைவான நேரத்தில் எளிதாக செய்கிறோம். இவைகளை நாம் பயன்படுத்துவதில் எந்த தவறும் இல்லை. எவ்வாறு, எந்த நோக்கத்திற்குப் பயன்படுத்துகிறோம் என்பதுதான் முக்கியம்.

இன்றைக்கு நாம் பயன்படுத்தும் Smart phone, computer software, Internet, அதிக வளர்ச்சி பெற்றுள்ளது. அநேக mobile apps நமக்கு பெரிதும் உதவியாக இருக்கிறது.

டிக்கெட் எடுப்பதற்கும், வங்கியில் பணம் அனுப்புவதற்கும் மிகவும் உதவியாக உள்ளது. மேலும் செய்திகளை துரிதமாக அனுப்புவதற்கு மிகவும் உதவியாக இருக்கிறது. ஆகவே எல்லா தொழில் நுட்பங்களும் நமக்கு அவசியமாய் இருக்கிறது.

## தானியேல் (1:8)

தானியேலுக்கு ராஜாவின் அரண்மனையில் சுவையான அசைவ உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் தானியேலோ அந்த உணவுகளை தவிர்த்து சாதாரண உணவுகளையே உண்டு, தன்னைக் காத்துக் கொண்டான். ஏனென்றால் அரச விருந்தில் மதுபானங்களும், விக்கிரங்களுக்கு படைக்கப்பட்ட உணவுகளும் இடம் பெற்றிருந்தது. தானியேல் கர்த்தருக்கு பயந்ததினாலே அவருக்குப் பிரியமாய் நடந்து கொண்டான்.

## Gadgets

இன்றைக்கு அநேகர் பயன்படுத்துகிற Smart phone, மற்றும் Internet குறிப்பாக Face book, Whats apps, You tube, Twitter, Google இதைப் பயன்படுத்துவதில் எந்த தவறும் கிடையாது, நாம் எவ்வாறு, கையாளுகிறோம் என்பதே முக்கியம்.

* நான் எதை பார்க்கிறேன்?

  What am i seeing?

* எதை கேட்கிறேன்?

  What am I hearing?

* எதை பகிர்ந்து கொள்கிறேன்?

  What am i sharing?

## கடல் மீன்கள்

கடல் நீர் உப்பாக இருக்கும். ஆனால் அதில் இருக்கும் மீன்கள் அக்கடலின் உப்பு தன்மை இருப்பதில்லை.

1 யோவான் 5:19 "*உலகம் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்றும் அறிந்திருக்கிறோம்*".

1 யோவான் 5:18 "*தேவனால் பிறந்தவன் தன்னை காக்கிறான் பொல்லாங்கன் அவனைத் தொடான்*"

இந்த உலகத்தில் பாவம் பலவிதங்களில் உலாவிக் கொண்டிருக்கிறது. ஆனாலும் நாம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகவும், பரிசுத்தவான்களாகவும் இருக்கிறோம். கிறிஸ்துவின் சிந்தை நமக்கு வேண்டும்.

பவுல் தீமோத்தேயுக்கு ஆலோசனைகள் கொடுக்கும் போது 2 தீமோத்தேயு 2:22 "*அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடு. சுத்த இருதயத்தோடே, கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும், சமாதானத்தையும் அடையும்படி நாடு*" என்று அறிவுரை கூறுகிறார்.

* தேவையற்ற நண்பர்களுடன் chat பண்ணுவதை தவிர்க்க வேண்டும்,

* தனிப்பட்ட முறையில் (Personal) எதிர்பாலரோடு உள்ள உறவை தவிர்ப்பது நல்லது (Cell & chat).

* முன்பின் தெரியாதவர்களை நண்பர்களாக வைத்துக் கொள்ளக்கூடாது (Facebook).

* தனிப்பட்ட முறையில் (Personal) தகவல்களையோ போட்டோக்களையோ share பண்ணக் கூடாது. இவைகளைத் தவறாக பயன்படுத்த வாய்ப்பு உண்டு.

* தேவையற்ற வீடியோக்களைப் பார்ப்பதை தவிர்க்கவும்.

* தேவையற்ற இணையதளத்தின் பக்கங்களுக்கு செல்லக்கூடாது.

## எப்படி பயன்படுத்துவது

* அவசியமான இணைய பக்கங்களைப் பார்வையிடலாம்,

* சுவிசேஷ வசனங்களையும், சத்தியங்களையும் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளலாம்.

* நல்ல கிறிஸ்தவ குறும்படங்களைப் பகிரலாம் (yes HE is.com) ல் அநேக குறும்படங்கள் உள்ளன.

* தேவன் நமக்கு செய்யும் நன்மைகளை நண்பர்களுக்கு சாட்சியாக பகிரலாம்.




**எல்லா அறிவியல் தொழில் நுட்பங்களையும் ஆண்டவருக்காகப் பயன்படுத்த வேண்டும்**



Mobile phone & internet ஐ நான் எவ்வாறு பயன்படுத்துகிறேன். எந்த நோக்கத்திற்காக பயன்படுத்துகிறேன்?

நான் எவ்வளவு நேரம் செலவு செய்கிறேன்?

நேரத்தை வீணடிக்கிறேனா, அல்லது பயன்படுத்துகிறேனா?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே. எல்லா தொழில் நுட்பங்களுக்காக நன்றி. இவை அனைத்தையும் உம்முடைய நாமத்திற்கு மகிமையாக பயன்படுத்த எனக்கு உதவி செய்யும். இயேசுவின் நாமத்தில் ஆமென்.

17

# உகந்த காணிக்கை



## Best Offering

**தேவனுக்கென்று கொடுப்பது, தேவன் செய்த நன்மைகளை நினைத்து, அன்பின் அடிப்படையில் நன்றி உள்ள உணர்வோடு கொடுக்க வேண்டும்.**

2 கொரிந்தியர் 9:6,7.

*"சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்"*

*"உற்சாகமாய் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாய் இருக்கிறார்"*

## சிறுபெண்

ஒரு சபையில் ஆராதனை நடந்து கொண்டிருந்தது, அப்பொழுது நாம் தேவனுக்கென்று கொடுக்கும் நேரம் என்று போதகர் அறிவித்தார். உடனே எல்லாரும் காணிக்கை பெட்டியில் தங்களுடைய காணிக்கையை செலுத்தினர். அந்த சபையில் ஒரு சிறு ஏழை பெண் காணிக்கை போட பணமில்லை. ஆகவே காணிக்கை பெட்டி அருகே நின்றாள். உடனே போதகர் "ஏன் நிற்கிறாய்" என்றார். அதற்கு அந்த சிறு பெண் கர்த்தருக்கு காணிக்கை செலுத்த ஒன்றுமில்லை. ஆகவே என்னையே கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்துகிறேன் என்றாள். அனைத்து சபை மக்களும், போதகரும் அவளுடைய அர்ப்பணிப்பைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்.

## ஏழை பெண் காணிக்கை

இயேசு இந்த பூமியில் வாழ்ந்தபோது ஒரு வயதான பெண்மணி ஒரு பணத்தை காணிக்கை போட்டாள். பார்த்தவர்கள் ஏளனமாய் பேசினார்கள். ஆனால் இயேசு அந்த பெண்மணியைப் பாராட்டி பேசினார். மற்றவர்கள் தங்கள் பரிபூரணத்திலிருந்து போட்டார்கள். ஆனால் இந்த ஏழை பெண் தன் ஜீவனுக்காக வைத்ததை போட்டாள் என்றார்

## ஆபேல் - காயீன் (ஆதி- 4)

ஆபேலும், காயீனும் கர்த்தருக்கு காணிக்கை செலுத்தினார்கள். **தேவன் ஆபேலையும் அவன் காணிக்கையும் ஏற்றுக் கொண்டார். காயீனையும் அவன் காணிக்கையையும் ஏற்றுக்கொள்ளவில்லை.**

காணிக்கை செலுத்தும் முன் நாம் எப்படிபட்டவர்கள் என்பதை தேவன் அறிவார்.

“பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது” (சங் 24:1)

“பொன்னும் வெள்ளியும் அவருடையது” (ஆகாய் 2:8)

ஆகவே உலகத்தில் உண்டான அத்தனையையும் உருவாக்கியவர் நம் தேவன். நாம் செலுத்தும் காணிக்கை ஒரு பொருட்டல்ல. நாம் எந்த நோக்கத்தில், விதத்தில் செலுத்துகிறோம் என்பதை பார்க்கிறார்.

## இயேசுவும்-காணிக்கையும் (மத் 5:24,25)

இயேசு காணிக்கை செலுத்துகிறவர்களைப் பற்றி சொல்லும்போது, “நீ காணிக்கை செலுத்த வரும்போது உன் சகோதரனிடத்தில் பகை இருந்தால், முதலில் அதை சரி செய்துவிட்டு காணிக்கை செலுத்து என்று சொல்லியிருக்கிறார்”

நாம் தவறான நோக்கத்தோடு, எண்ணங்களோடு காணிக்கை செலுத்தக்கூடாது. 10 ருபாய் போட்டால் 100 கிடைக்கும். 100 போட்டால் 1000 கிடைக்கும் என்ற ஜாக்பாட் எண்ணத்தோடு தேவனுக்கு காணிக்கை செலுத்தக்கூடாது.

தேவன் நமக்கு செய்த எல்லா நன்மைக்கும் **அவர்தான் ஆதாரம்** (He is my source)என்ற உணர்வோடும் நன்றி உணர்வுடனும், அன்புடனே, மனப்பூர்வமாக காணிக்கை செலுத்த வேண்டும்.

நாம் தேவனுக்கு காணிக்கை கொடுக்கும்போது, தேவன் நம்மை அவருடைய வாக்குத்தத்தத்தின்படி ஆசீர்வதிப்பார்.

## யாருக்கு கொடுக்கலாம்

1. சபைக்கும், சபை சார்ந்த ஊழியர்களுக்கும்...
2. சுவிசேஷ ஊழியங்கள், மிஷனெரி ஊழியங்களுக்கு...
3. ஏழைகள், திக்கற்ற பிள்ளைகளுக்கு, விதவைகளுக்கு...
4. பரிசுத்த ஆவியின் ஏவுதலின்படி மற்ற ஊழியர்களுக்கு...

**பொருளாதார ஆசீர்வாதத்திற்கு திறவுகோல் மனப்பூர்வமாய் தேவனுக்கு கொடுப்பதே**



நான் தேவனுக்கு எவ்வாறு காணிக்கை செலுத்துகிறேன்?

கொடுப்பதில் என் மனம் தாராளமாய் இருக்கிறதா?

கொடுக்கும்போது கட்டாயமாய் கொடுக்கிறேனா அல்லது மனப்பூர்வமாய் கொடுக்கிறேனா?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, உம்முடைய எல்லா ஆசீர்வாதங்களுக்காய் நன்றி. எனக்கு மனப்பூர்வமாக கொடுக்கும் எண்ணத்தைத் தாரும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறேன். ஆமென்.

18

# மனதிலும், சரீரத்திலும் சுத்தம்

*Be clean in mind & body*



**வெற்றியுள்ள வாழ்விற்கு மனிதன் உள்ளத்திலும், வெளிப்புறத்திலும் சுத்தமாக இருக்க வேண்டும்.**

*நீதி 23:7 அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்;*

*"உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்"* ரோமர் 12:2

## ஆதாம்

தேவன் மனிதனை படைக்கும்போது அவருடைய சாயலாகவும், (Image)ரூபத்தின்படியும் (likeness) படைத்தார். ஆதியாகமம் (2:5) எல்லாவற்றையும் படைத்துவிட்டு தேவனாகிய கர்த்தர் மனிதனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக் கொண்டுவந்து, அதை பண்படுத்தவும், காக்கவும் வைத்தார்.

Friends, அன்றைக்கு ஆண்டவர் இந்த முழு உலகத்தையே ஒரு மனிதனை நம்பி கொடுத்தார். ஆனால் அந்த மனிதன் அதை தவறவிட்டான். இன்றைக்கு நமக்கு அறிவு ,திறமைகள் ,நல்ல சரீரம், எல்லாவற்றையும் ஆண்டவர் கொடுத்திருக்கிறார். நாம் சரியாக பயன்படுத்த வேண்டும்.

தேவன் நமக்கு கொடுத்த மிகப்பெரிய பொக்கிஷம் சிந்திக்கும் திறனான 6ம்அறிவு. உலகில் எந்த மிருகத்திற்கும் கொடுக்கப்படவில்லை. இந்த சிந்தனை சக்தி தான் எல்லா அறிவியில் முன்னேற்றத்திற்கும் காரணம். அநேக அறிவியல் அறிஞர்கள் இதை பயன்படுத்தி நல்ல காரியங்களை சாதித்திருக்கிறார்கள். ஆகவே இந்த மனம் மனிதனின் வாழ்வின் வெற்றிகளுக்கு அவசியமானது நீதி 4:23 ***எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்*** என்று கூறப்பட்டுள்ளது.

ரோமர் 12:2. *மனம் புதிதாக வேண்டும்* என்று பவுல் கூறுகிறார். ஆகவே தேவன் கொடுத்த மனதையும் சரீரத்தையும் சரியாக பராமரிக்க வேண்டும்.

## நல்ல எண்ணங்களை எப்படி வளர்ப்பது

1. நாம் நம்முடைய வாழ்வில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளவேண்டும். அப்பொழுது இயேசுவானவர் நம்மை புதுசிருஷ்டியாக மாற்றி விடுவார் பழையன எல்லாம் ஒழிந்து போகும் எல்லாம் புதிதாகும்.

2. பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படவேண்டும். அவரே சகல சத்தியத்திற்குள்ளும் நம்மை நடத்துவார். நம்முடைய எண்ணங்கள் அவருடைய கட்டுப்பாட்டிற்குள் வந்து விடும்.

3. வேத வசனங்களை, தினமும் முறையாக வாசித்து, தியானித்து ஜெபிக்கவேண்டும்.

4. நாம் கிறிஸ்துவுடையவர்கள் என்ற எண்ணம் வேண்டும். நாம் தேவனுடைய பிள்ளை என்பதை மறக்க கூடாது.

5. சோம்பேறியாக இருக்க கூடாது (an Idle mind is devil's workshop) நாம் சும்மா இருக்கும் போது தேவையற்ற எண்ணம் தோன்றும்.

6. நல்ல ஆவிக்குரிய புஸ்தகங்கள்,பாடல்கள், செய்திகள் கேட்கவேண்டும்.

   நாம் இயேசுவை ஏற்றுகொண்டதால் நாம் பரிசுத்தவான்கள், பாவி என்ற எண்ணம் வரக்கூடாது. பாவி என்ற எண்ணம் பாவசிந்தைக்கு வழி வகுக்கும்.

7. நமக்கு பிடித்தமான விளையாட்டை விளையாடலாம். (மொபைலில் அல்ல) (outdoor game).

8. தேவன் நமக்கு கொடுத்த தாலந்துகளையும், திறமைகளையும் வளர்த்துக் கொள்ளவேண்டும், தேவனுக்காக பயன்படுத்த வேண்டும்.

9. தவறான நண்பர்களின் ஐக்கியத்தை வைத்து கொள்ளகூடாது.




## எண்ணங்களைக் கெடுக்கக்கூடியவைகள்

### கண்கள்

நம்முடைய எண்ணங்களை கெடுக்க கூடியது கண்வழியாகதான் செல்லுகிறது, ஆகவே நம் கண்கள் சரியாக இருக்கவேண்டும்.

*"கண் சரீரத்தின் விளக்கு"*

### தவறான ஐக்கியங்கள் (Wrong Company)

இன்றைக்கு நம்மை இணைக்கும் அநேக சமூகவலைதளங்கள் உண்டு (Facebook, Whatsapp, Youtube, google, mobilephone) இதை நன்மைக்காகவும், அவசியத்திற்காகவும் பயன்படுத்துவது நல்லது. தவறாக நாம் பயன்படுத்தும்போது நம்முடைய எண்ணங்களும், செயல்களும் கெட்டுப்போகும்.

பிரசங்கி 10:1 *"செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளத்தை நாறிக்கெட்டுப் போகப்பண்ணும்"* சின்ன தவறான விஷயங்கள் நம்மை குறித்த தேவனது பெரிதான திட்டத்தை கெடுத்துவிடும்.

## சரீர சுத்தம்

நாம் தேவன் தங்கும் ஆலயம் என்று வேதம் கூறுகிறது ஆகவே உள்ளும், புறமும் நம்மை சுத்தமாக வைத்து கொள்ள வேண்டும்.

1. சுத்தமான ஆடைகளை உடுத்த வேண்டும். (சாக்ஸ் மற்றும் உள்ளாடைகளை தினமும் மாற்றவேண்டும்)

2. தலையில் எண்ணெய் தேய்க்க வேண்டும். இதனால் சரீரத்தில் அதிக வெப்பம் வராமல் சமநிலையில் இருக்கும்.

3. சரியான நேரத்திற்கு முறையாக நல்ல உணவுகளை உட்கொள்ள வேண்டும். (கடையில் விற்கும் உணவுகளை தவிர்ப்பது நல்லது. (Fast food)

4. செயற்கை பானங்களை குடிப்பது உடலுக்கு கேடு உண்டாக்கும். ஏனென்றால் அதிக இரசாயனம் சேர்க்கப்பட்டிருக்கும். அதிகமான தண்ணீர் குடிக்கலாம். இயற்கை பானங்களான கரும்புச்சாறு, இளநீர், பழச்சாறு, (Fresh Juice) குடிக்கலாம்

5. நொறுக்குத் தீனி (Snacks) தவிர்க்கவேண்டும். (தேவையற்ற எடை அதிகரிக்கும், பசியில்லாமை ஏற்படும்)

6. சரியான நேரத்திற்குள் தூங்க வேண்டும். (இரவு 10 மணிக்கு முன்) அதிகாலையில் எழுவதும் நல்லது (இரவில் தேவையற்ற T.V நிகழ்ச்சிகள், mobile chating, internet தவிர்ப்பது நல்லது)

7. தேவையான உடற்பயிற்சி, நடை பயிற்சி, விளையாட்டில் ஈடுபடவேண்டும்.

8. பெற்றோருக்கு வீட்டில் உதவி செய்யவேண்டும்.

9. நண்பர்களோடு சேர்ந்து ஊர் சுற்றுவதை தவிர்க்க வேண்டும், இதனால் சரீரம் சோர்வடையும்.

பிரசங்கி 12:1

*"வாலிபனே உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை"* என்று வேதம் கூறுகிறது.

**வாலிப நாட்களில் உங்களுடைய தாலந்து, திறமைகள், நேரம், செல்வாக்குகள், கல்வி, அறிவு, ஞானம், அனைத்தையும் கர்த்தருக்காக பயன் படுத்துங்கள் உங்கள் வாழ்வு வெற்றியுள்ளதாகும், ஆசீர்வாத நாட்களாக இருக்கும்.**
**"வேத வார்த்தையின்படி நம் வாழ்வை அமைத்துக் கொள்ள வேண்டும்"**



எதை குறித்து நான் அடிக்கடி எண்ணுகிறேன்?

என்னுடைய எண்ணம் தேவனுக்கு பிரியமானதாய் இருக்கிறதா?

நான் தேவன் தங்கும் ஆலயம் என்று எண்ணியதுண்டா?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே என்னுடைய எண்ணங்களையும், சரீரத்தையும் சுத்தமாக வைத்துகொள்ள உதவிடும். இயேசுவின் நாமத்தில் ஆமென்

# 19 எந்த நிலையிலும் ஊழியம்

*At any cost*



**ஆண்டவருடைய பிள்ளைகளாகிய நாம் ஒவ்வொருவரும் இயேசுவை மற்றவர்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும். நாம் பெற்ற இரட்சிப்பு, சந்தோஷம், பாவமன்னிப்பு, ஆசீர்வாதங்கள் மற்றவர்களும் பெற நாம் உதவி செய்ய வேண்டும்.**

**யோவான் 12:26**

*"ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்"*

**மத் 28:19,20**

*"நீங்கள் புறப்பட்டுப் போய்..........நான் உங்களுடனே இருக்கிறேன்."*

## நம்பிக்கையில்லாத உலகம்

நம்மை சுற்றிலும் இருக்கிற அநேக மக்கள் நம்பிக்கையில்லாமல், வருங்கால பயத்தோடும், சமாதானம் இல்லாமலும், பாவத்திலும், வறுமையிலும், வியாதியிலும், மனக் குழப்பத்திலும், கவலையிலும் வாழ்கின்றனர். இவர்கள் பிரச்சனைக்கு ஒரே தீர்வு இயேசுவைப் பற்றிய நற்செய்தி தான். ஆண்டவராகிய இயேசுவால் மட்டுமே எல்லா பிரச்சனைக்கும் நிரந்தரவு தீர்வு தரமுடியும். இந்த நற்செய்தியை சொல்ல நம்மால் மட்டும் முடியும். ஆண்டவர் இந்த வேலையை நாம்தான் செய்ய முடியும் என்று நம்மை நம்பியிருக்கிறார்.

## சிறையில் சுவிசேஷம்

ஒரு கம்யூனிஸ்டு நாட்டில் ஊழியம் செய்ததற்காக, ஒரு போதகரை சிறையில் அடைத்துவிட்டனர். ஒரு முறை அவருடைய மனைவி சிறையில் இருக்கும் போதகரை பார்க்க சென்று அவருக்கு ஆறுதல் கூறினார். அவருக்கு கொஞ்சநேரம் கொடுக்கப்பட்டிருந்தது பார்த்து முடித்த பின் அவருடைய மனைவி தான் கொண்டு வந்த வாழை பழத்தை தன் கணவனுக்கு கொடுத்து விட்டு வீடு திரும்பினார். சிறையில் இருக்கும் போதகர் தன்னுடைய சிறைக்கு சென்றார். பின்னர் தன் மனைவி கொடுத்த வாழைப் பழத்தை சாப்பிட பழத்தை எடுத்து உறித்தார். வாழைப்பழத்திற்குள் ஒரு பேனா ரீபிள் சொருகி இருந்ததை பார்த்து

அதிர்ந்து போனார். பின்னர் ஜெபம் செய்து யோசித்தார். மேலைநாடுகளில் குளிர் அதிகம் இருக்கும் ஆகவே அந்த குளிருக்காக சிறைச்சாலையில் சிகரெட் கைதிகளுக்கு கொடுக்கப்படும். போதகர் தன் மனைவி கொடுத்த பேனா ரீபிளை வைத்து அங்கு கொடுக்கப்படும் சிகரெட் தூளை தட்டி விட்டு அதை சிறிய துண்டு பேப்பராக மாற்றி அதில் சுவிசேஷ வசனங்கள் எழுதி சிறை கைதிகளுக்கு கொடுத்தார். இதனால் சிறைச்சாலையில் அநேக கைதிகள் இரட்சிக்கப்பட்டனர். மோசமான குற்றவாளிகள் இயேசுவின் சுவிசேஷ வசனங்களை படித்து இரட்சிக்கப்பட்டனர்.

## நாம் என்ன செய்ய வேண்டும்

1. நமக்கு தெரிந்த நபர்கள் பெயர்களை எழுதி வைத்து தொடர்ச்சியாக அவர்களுடைய இரட்சிப்பிற்காக ஜெபிக்க வேண்டும்.

2. சரியான சந்தர்ப்பங்களில் இயேசுவை குறித்து சொல்ல வேண்டும்.

   1. வியாதி நேரங்களில், 2. மன உளைச்சல், 3. குடும்ப பிரச்சனைகள்
   4. நம்பிக்கையற்ற நேரங்களில் 5. கடன் பிரச்சனைகளில்

   மேலே சொல்லப்பட்ட சந்தர்ப்பங்களில் நம்முடைய நண்பர்களுக்கும், உறவினருக்கும் இயேசுவை பற்றி கூறலாம்.

3. நம்முடைய பிறந்த நாள் கொண்டாட்டங்களிலும் நம்முடைய நண்பர்களுக்கு இயேசுவைப் பற்றி சொல்லலாம்.

4. நாம் இரட்சிக்கப்பட்ட சாட்சியை சுருக்கமாக மற்றவர்களுக்கு சொல்லலாம்.

5. **Jesusfilm** மற்றும் சுவிசேஷ **DV D** கொடுக்கலாம், whatapp,facebook மூலம் நண்பர்களுக்ளு சுவிசேஷ குறும்படங்களை **share** பண்ணலாம்,

6. நாம் ஆண்டவரைப் பற்றி சொல்லும் போது மற்ற மதங்களை குறைத்தோ, புண்படுத்தியோ பேசக்கூடாது வீண்வார்த்தைகள் சொல்வதை தவிர்க்க வேண்டும்.

7. சபையில் நடக்கும் ஊழியங்களிலும், சுவிசேஷ ஊழியங்களிலும், ஐக்கிய கூடுகையிலும் பங்கு பெற வேண்டும்.

8. படிக்கும் பள்ளிகளிலோ, அல்லது கல்லூரிகளிலோ வேலை செய்யும் இடங்களிலோ, சிறு ஜெபகுழுக்கள் ஆரம்பிக்கலாம்.

**நாம் இந்த பூமியில் தேவனுக்காக செய்யும் ஊழியம் மட்டும் பரலோகத்தில் நமக்கு பொக்கிஷமாக வந்து சேரும்.**



ஆண்டவருடைய ஊழியத்திற்கு ஆர்வத்துடன் பங்கேற்கிறேனா?

என்னுடைய நேரங்களை ஆண்டவருடைய ஊழியங்களுக்கு செலவு செய்கிறேனா?

என்னுடைய தாலந்துகள், திறமைகள் கர்த்தருடைய ஊழியங்களுக்கு பயன்படுகிறதா?



## Action Steps



## ஜெபம்

அன்புள்ள ஆண்டவரே, உம்மைப் பற்றி மற்றவருக்கு சொல்ல தைரியத்தையும், ஞானத்தையும் எனக்கு தாரும் இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 20 வில்லியம் கேரி




**பெரிய காரியங்களை செய்ய சாதாரண மனிதர்களையும் ஆண்டவர் பயன்படுத்த முடியும்.**

*என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான். யோவான் 14:12*

## பிறப்பு

"கர்த்தரிடத்திலிருந்து பெரிய காரியங்களை எதிர்பாருங்கள். கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்ய முற்படுங்கள்" என்ற உயர்ந்த வார்த்தைகளுக்கு சொந்தகாரரான வில்லியம் கேரி 1761ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17ந் தேதியில் இங்கிலாந்து தேசத்தில் ஒரு நெசவாளர் குடும்பத்தில் பிறந்தார்.

தனது 21ம் வயதிலேயே லத்தீன், கிரேக்கம், எபிரேயம், இத்தாலியன், ஜெர்மன் மற்றும் பிரேஞ்சு ஆகிய மொழிகளில் தேர்ந்த வல்லுனராக காணப்பட்டார். இவர் தேவனுடைய அழைப்பை பெறும் முன், செருப்பு தைக்கும் தொழிலைச்செய்து வந்தார்.

## அழைப்பு

செருப்பு தைக்கும் தொழிலின் போது மற்றவர்களுடன் பிரசங்கித்துக்கொண்டு அல்லது ஒரு புத்தகத்தை படித்துக்கொண்டிருப்பார். தோலினால் ஒரு உலக உருண்டை செய்து வைத்து, தினமும் ஜெபித்து வந்தார். ஒருநாள் தேவனுடைய அழைப்பை உணர்ந்தார்.

அதிக ஜெபத்திற்கு பிறகு தேவன் இந்தியாவிற்கு வருகிறதற்கான வாசலை திறந்தார். அவருடைய மனைவியும், பிள்ளைகளும், டாக்டர் தாமஸ் அவர்களும் இணைந்து 1793ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மேற்கு வங்காளத்திலுள்ள ஹீக்ளி துறைமுகத்தில் வந்து சேர்ந்தனர்.

## இந்தியா

மிக ஆர்வத்துடனும், ஆத்தும பாரத்துடனும் வந்த கேரிக்கு ஊழியத்தின் ஆரம்ப வருடங்கள் மிகவும் சோர்வைத்தரக்கூடியதாக இருந்தது. 7 வருட கடின பிரயாசத்திற்கு பின்புதான் ஒரு நபர் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டார். நோய், மனைவியின் மனநிலை பாதிக்கப்பட்டநிலை, பிள்ளைகளின் மரணம், ஆனாலும் அயராமல் முன்னேறி சென்று தன் பணியை சிறப்பாக

செய்தார். தன்னுடைய 73ம் வயதில் 1834ம் வருடம் ஜீன் மாதம் 9ம் தேதி இறைவனோடு சேர்ந்தார். இவர் மரித்த பின்பு, இவர் ஆற்றிய அருட்பணிகள் மூலம் கிறிஸ்துவுக்குள் வந்த ஆத்துமாக்கள் கோடிக்கணக்கானோர்.

## சாதனை



வில்லியம் கேரியுடைய இந்திய வருகையின் 200 ஆண்டு நிறைவையொட்டி அரசாங்கம் அவர் சாதனையைப் பாரட்டி தபால் தலை ஒன்றை வெளியிட்டது. இவர் வேதாகமத்தை 6 மொழிகளிலும், வேதபுத்தகத்தின் பகுதிகளை 29 வெவ்வேறு மொழிகளிலும் மொழிபெயர்த்தார். இவர் காலத்தில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் 100க்கும் அதிகமான கிராம பள்ளிகளையும், பின்நாளில் பல்கலைகழகமாக உயர்த்தப்பட்ட செராம்பூர் கல்லூரியையும், “சிந்தியத்தோட்டக்கலை” என்ற அமைப்பையும் நிறுவினார். “சமாச்சர் தர்ப்பன்” என்ற பெயரில் முதல் இந்திய செய்திதாளையும், இன்றைய “ஸ்டேட்ஸ்மென்” செய்திதாளின் முன்னோடியான பிரண்ட் ஆப் இந்தியா என்ற செய்தி தாளையும் பதிப்பித்தார். ஐந்து வேவ்வேறு மொழிகளுக்கு அகராதிகளும், இலக்கணங்களும் எழுதினார். இவரின் இச்சிறந்த படைப்புகள் இவருக்கு பின் வந்த அநேக மிஷெனரிகளுக்கு மிகவும் உறுதுணையாக அமைந்தது. இராமாயணத்தையும், மகாபாரத்தையும் வங்காள மொழியில் மொழி பெயர்த்தார். ராஜாராம் மோகன்ராயோடு இணைந்து “சதி” கொடுமைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.




**நம்மை கர்த்தருக்கு ஒப்புகொடுக்கும்போது தேவன் நம்மை வல்லமையாக பயன்படுத்துவார்.**

தேவனுடைய ஊழியத்திலே நான் எவ்வாறு பங்கு கொள்கிறேன்?





## Action Steps

## ஜெபம்



அன்புள்ள ஆண்டவரே என்னை எதற்காக இந்த உலகத்தில் படைத்தீரோ, அந்த பெரிய திட்டத்திற்கு என்னை ஒப்புக்கொடுக்கிறேன் . இயேசுவின் நாமத்தில் ஆமென்

# Useful websites & mobile Apps

www.everystudent.com
www.gotquestions.org
www.stanleyonbible.com
www.wordofgod.in
www.christianmobile.com
www.jesusfilm.org (Jesus films in all languages)
www.yesHEis.com (more Christian videos)
www.tamilbible.com
www.tamilbilble.net
www.indiacollegefinder.org (கல்வி வழிகாட்டி)

**Leadership**

www.healthyleaders.com
www.leadersource.org
www.leadersource.in

**Travel booking site**

| | |
|---|---|
| Railway ticket booking | www.irctc.co.in |
| Tamil nadu Govt busbooking | www.tnstc.in |
| Private bus Booking | www.redbus.in |
| Online EB Payment | www.tneb.in |

**Mobile Apps**

Godtool
gotquestion
Runalpha
Superbook
yesHeis ( more shorfilms)
tamilbible
amplifiedbible
nkjvbible
UTS ( chennai local train ticket booking )

## எமது ஊழியங்களும் & புத்தக வெளியீடும்

சுவிசேஷ பயிற்சி

சபை வளர்ச்சி கருத்தரங்கு

கல்லூரி ஊழியங்கள்

படக்காட்சி ஊழிய பயிற்சி

வாலிபர் தலைவர் பயிற்சி Youth leaders Training

### புத்தக வெளியீடு

## ஞாயிறுப்பள்ளி பாடங்கள் (ஒரு வருடப் பாடத்திட்டம்)

ஒலிவக்கன்றுகள் – Volume - 1

ஒலிவக்கன்றுகள் – Volume - 2

ஒலிவக்கன்றுகள் பாடல்கள் Volume - 1 Action Songs (25)

ஒலிவக்கன்றுகள் பாடல்கள் Volume - 2 Action Songs (25)

வேதாகம அனிமேஷன் 22 படங்கள் DVD

கைபிரதி (Gospel Tract)

Gospel short film ( whatsapp and facebook) & பயன்படுத்துவதற்கு

தொடர்புக்கு : Bro. P. Sundar Olive Plants 9841561959
Sundarfilm@gmail.com



**Safety Tips**

1. மொபைலில் பேசிக் கொண்டே வண்டி ஓட்ட வேண்டாம்.

2. போக்குவரத்து சிக்னலுக்கு கீழ்படிந்து வண்டி ஓட்ட வேண்டும்.

3. அதி வேகமாக வண்டி ஓட்ட வேண்டாம்.

4. செல்போன் பேட்டரி சார்ஜில் இருக்கும் போது போன் பேச வேண்டாம்.

5. கடன் வாங்கி எந்த பொருட்களையும் வாங்க வேண்டாம்.

6. கிரிடிட் கார்டு பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.

7. தரமற்ற பொருட்களை வாங்குவதை தவிர்க்கவும். (Discount Sales)

8. நீச்சல் தெரியாதவர்கள் நீர்நிலைகளுக்கு செல்லாமல் இருப்பது நல்லது.

9. பஸ் மற்றும் ரயிலில் பயணம் பண்ணும்போது படிக்கட்டில் நிற்கக்கூடாது.

## MODEL : RESUME

**S.P.xxxxxxxxxx**
24/10, xxxxxxxxxxxxxx,
KAMARAJ NAGAR.,
AVADI - 600071.

MOB NO: xxxxxxxxxx
*mail id xxxxxxx@yahoo.com*

### OBJECTIVE

Seeking position to utilize my skills and ability and updating my knowledge on the latest technology in the field and bring more success to my company myself through hard work and dedication.

### ACADEMIC CHRONICLE

| COURSES | INSTITUTION | PERCENTAGE | YEAR OF PASSING |
|---|---|---|---|
| $10^{th}$ standard | St.Pauls Matric Hr. Sec. School. | 83% | May 2006 |
| HSC | Jeeva Velu Hr.Sec.School. | 77% | April 2008 |
| B.E(CIVIL) | V.R.S.College of Engg and Tech | 6.39GP | May 2012 |

### ACADEMIC PROJECTS

**MAIN PROJECT** : Effect of Metakaolin modifying the strength of concrete and durability of mortar.

**MINI PROJECT** : Seismic analysis and design of six storey building.

### EXPERIENCE

- I worked as a **CADD ENGINEER** in **CADD CENTRE, VILLPURAM** for 6 months from June 2012 to December 2012.
- I worked as a **DESIGN ENGINEER** in **AXISET ENGINEERING PVT. LTD. - ARUMBAKKAM, CHENNAI** from Jan 2013 to April 2013.

### SOFTWARE SKILL

- STAAD PRO as a foundation course in **CADD CENTRE.**
- AUTO CAD 2D & 3D
- RIVET ARCHITECTURE
  - ⇒ Autodesk Certified Associate in REVIT ARCHITECTURE-316108
  - ⇒ Autodesk Certified Professional in REVIT ARCHITECTURE-316109

### EXTRA CURRICULAR

- I got gold medal in Anna University zonal chess match.
- I got young scientist award in my school.
- Participated in the paper presentation **"ADVANCE TRENDS IN CONCRTET TECHNOLOGY"** organized by Anna University.

## KNOWLEDGE SKILL

- To deal people diplomatically
- Willingness to learn new things

## REFERENCE

- Mr. A.P.xxxxx.,
  11/7, xxxxxxxxxx
  ARUMBAKKAM, CHENNAI - 600 106.
  Mobile No: xxxxxxx

## PERSONAL DETAILS

| | |
|---|---|
| NAME | : |
| FATHER NAME | : |
| DATE OF BIRTH | |
| GENDER | : |
| NATIONALITY | : |
| RELIGION | : |
| LANGUAGE KNOWN | : |
| FIELD INTEREST | : |
| HOBBIES | : |
| AMBITION | : |
| SPORTS | : |

## DECLARATION

I hereby declare that the above information is true to the best of my knowledge.

Signature,

----------------------------------------